KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 124 குரோதி வருடம், கார்த்திகை மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை
(12.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ.ஆகிர் -10, 0115 886187 - பக்கங்கள் 12
விலை ரூ.40

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

### ஜனாதிபதியின் உத்தரவை ஏற்க மறுக்கும் ஆலை உரிமையாளர்கள்

# அரிசித் தட்டுப்பாடு மேலும் நீடிக்கிறது!



### கிலோவுக்கு 65 ரூபா வரியால் இந்திய இறக்குமதியும் பாதிப்பு

*நா.தினுஷா*

அரிசி நிர்ணய விலை குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் விடுக்கப்பட்ட விசேட நிர்ணய விலை அறிவிப்பை அரிசி ஆலை உரிமையாளர்கள் ஏற்க மறுத்துள்ளதாக அறியமுடிகிறது. இந்நிலையில், ஏற்கனவே வெளியிடப்பட்ட அரிசி நிர்ணய விலை வர்த்தமானியை திருத்தியமைப்பதா அல்லது புதிய வர்த்தமானியை வெளியிடுவதா என்பது தொடர்பில் அரச உயர் மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாக நேற்று (11) அறியக்கிடைத்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரிசி ஆலை வர்த்தகர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது ஜனாதிபதியால் அரிசிக்கான நிர்ணய விலையும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ஒரு கிலோ நாட்டரிசியை 225 ரூபா மொத்த விலைக்கும் 230 ரூபா சில்லறை... » 02 பக்கம்



## வைத்தியர்களின் வெளியேற்றம் தீவிரமாகும் நிலைமை!

வைத்தியர்களுக்கான பாதுகாப்பின்மை வலுவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள வைத்திய தொழிற்சங்க ஒன்றியம், இந்த நிலைமை நீடித்தால் நாட்டில் மீண்டும் வைத்தியர்களின் வெளியேற்றம் கடுமையாக அதிகரிக்குமென்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதனடிப்படையில், 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வைத்தியர்களுக்கான சம்பளம், மேலதிக கொடுப்பனவு மற்றும் வருமான வரி தொடர்பான பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசாங்கம் நிலைபேறான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் கொள்கையைத் தயாரித்து... » 02 பக்கம்

## இளம் வாக்காளர்கள் வாக்களிக்க ஏற்பாடு

### சட்டதிருத்தம் செய்ய அமைச்சரவை பணிப்புரை

இளம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு 2024ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பைப் பயன்படுத்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் வகையில் சட்டதிருத்தங்களை மேற்கொள்ளுமாறு சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அமைச்சரவை பணிப்புரை விடுத்துள்ளதாக சட்ட மா அதிபர் நேற்று புதன்கிழமை (11) உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

2024 வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான... » 02 பக்கம்

## தேங்காய் ஏல விற்பனை இடைநிறுத்தம்!

### சதொசவினூடாக விநியோகிக்க நடவடிக்கை



நாட்டில் தற்போது நிலவும் தேங்காய் நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்கும் வரை திறந்த சந்தையில் தேங்காயை ஏலத்தில் விற்பனை செய்வதை இடைநிறுத்தியுள்ளதாகவும் நாளொன்றுக்கு சதொசவினூடாக ஒரு இலட்சம் வரையிலான தேங்காய்களை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் அறிவித்துள்ளது.

குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் என்ற அடிப்படையில், எங்களின் நிறுவனத்தின் கீழுள்ள தென்னந்தோட்டங்களிலிருந்து நாளொன்றுக்கு ஒரு இலட்சம் வரையிலான... » 02 பக்கம்



## நிகழ்நிலை பாதுகாப்பு - பயங்கரவாத தடைச் சட்டங்களை விரைவாக நீக்குக!

### ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வலியுறுத்து

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றை எதிர்வரும் இரு வருடங்களுக்குள்ள நீக்குவதற்கு தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இலங்கை... » 02 பக்கம்

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

ஆயுள் காப்பீடு

கருவுலகில் உதித்தது தொட்டு இன்று வரை
வாழும் வாழ்க்கை நிச்சயமில்லை மரணம் நம்மை நெருங்கும் வரை
இறுதி சுவாசத்திற்கு இன்னோரன்ன நிமிடங்கள் இருக்கும் வரை
வாழ்வில் களிப்பு இருந்திடும் ஆயுள் காப்பீடு நம்மை கைவசம் உள்ள வரை.

வாணாள் பயணத்தை தொடர்ந்து ஓடும் வரை
வாழ்வின் சுமைகள் குறையாது நம் உயிர் உடலை விட்டு நீங்கும் வரை
கனம் நிறைந்த நம் கனவுகள் இருந்திடும் நாம் மண்ணில் புதையும் வரை
இதற்கு உத்தரவாதம் கிடையாது ஆயுள் காப்பீடு நம்மிடம் இல்லாத வரை.


புத்தகப்பை சுமையினை சுமந்து சென்றோம் கல்லூரி வாழ்க்கை முடியும் வரை
நாம் சுமந்தது நம் வாழ்வின் கனவுச்சுமையினை என்பதை அறியாதிருந்தோம்
வாலிப வயது நம்மை அடையும் வரை
பிள்ளை பருவத்தில் உண்டான கனவுகளுக்கு முற்றுப்புள்ளி ஏதும்
இருந்திடவில்லை நாம் மானிடராய் வளரும் வரை
அப்பருவத்தில் கண்ட ஆசை கனவுகள் கலையாது ஆயுள் காப்பீடு
நம்மிடம் உள்ள வரை.

அறிவு எனும் அரிய பொக்கிஷத்தை பெற முடியாது
நாம் துணிந்து முயற்சிக்காத வரை
அறிவு பலத்தை பெற்றவன் தோற்க மாட்டான் முயற்சியை
கை நழுவ விடாத வரை
வாழ்க்கை போராட்டத்தில் மட்டற்ற சவால் வரும்
நம் கை நிறைய பணம் குவியும் வரை
சவால் அனைத்தும் தீராது ஆயுள் காப்பீட்டைநாம் உறுதி செய்யும் வரை.

திடீர் இழப்பு நம்மை அடையும் வரை
பயமேதும் இல்லை ஆயுள் காப்பீடு நம்மிடம் உள்ள வரை
யூனியன் அஷூரன்ஸ் நம்மிடம் உள்ள வரை
காப்பீடு கிடைத்திடும் நம் ஆயுள் உள்ள வரை.

எம்.எச்.அமீரா சஹானி
யூனியன் அஷ்யூரன்ஸ் BLOG-IT போட்டி 2023 இன் பங்கேற்பாளர்.

* பிரதிபலிக்கப்படும் சிந்தனை மற்றும் அதன் பொருளடக்கங்களுக்கு ஆக்கத்தை எழுதியவர் முழுப் பொறுப்பாளியாவார்.
யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சியால் வழங்கப்பட்டது (PQ 12) 12/2024



## உஷ்

அரிசி விவகாரத்தால் பெரும் சர்ச்சையில் சிக்கிக்கொண்டிருக்கிறதாம் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை.

மாவட்ட ரீதியாக வரும் தகவல்களைத் திரட்டி ஜனாதிபதிக்கு அனுப்புவது அதிகாரசபையின் கடமை, என்றாலும், அந்தத் தகவல்கள் ஒழுங்காக அதிகாரசபைக்கு கொடுக்கப்படுகின்றனவா என்பதில் சந்தேகம் உள்ளதாம்.

ஊர்களிலுள்ள நிலைமைக்கும் அதிகாரசபை வெளியிடும் தகவல்களுக்கும் முரண்பாடு இருப்பதற்குக் காரணம் அதுதான். எப்படியோ நுகர்வோர் அதிகாரசபை ஊடகங்களிடம் மனந்திறந்து பேச பயப்படுவதால் நிலைமை மேலும் மோசமாகிக்கொண்டே செல்கிறது.

## மேற்கு முனைய முதலீட்டிலிருந்து அமெரிக்கா நீக்கம்




» 02 பக்கம்

### அதானி அதிரடி தீர்மானம்

### கமெண்ட் கந்தர்...



அரிசி பிரச்சினை அரசாங்கத்துக்கு வாய்க்கரிசி போட்டுவிடும்போல...




## யாழில் பரவும் மர்மக் காய்ச்சல்: நோயைக் கண்டறிய நடவடிக்கை!



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இனங்காணப்படாத காய்ச்சல் நிலைமைகொண்ட நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும் இந்த நோய் தொடர்பில் கண்டறிவதற்காக பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் இதுவரையில் 10,000 வரையான நோயாளர்கள் எலிக் காய்ச்சலால் பாதிப்படைந்துள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் .... » 02 பக்கம்

# சீன அரசின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சீருடைகள் பிரதமர் ஹரிணியிடம் கையளிப்பு



சீன அரசாங்கத்தின் உதவித்திட்டமாக கிடைக்கப்பெற்ற பாடசாலை சீருடைகளை சீனத் தூதுவர் Key Zheng Hong கொழும்பு துறைமுகத்தின் சர்வதேச கொள்கலன் முனையத்தில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் நேற்று முன்தினம் (10) பிற்பகல் கையளித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளுக்காக 11.817 மில்லியன் மீற்றர் துணி தேவையாகவுள்ளதுடன், பாடசாலை சீருடைகள் வழங்கப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 46 இலட்சத்து 40ஆயிரத்து 86 ஆகும். அதன்படி, 2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளின் முழுத் தேவையும் (100%) சீன மக்கள் குடியரசால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சீருடைத் துணிகள் மூன்று தொகுதிகளாக இலங்கையை வந்தடையவுள்ளதுடன், முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் ஏற்கனவே இலங்கையை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மூன்றாவது தொகுதி டிசம்பர் 25ஆம் திகதி வந்தடையவுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான எமது நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களின் மாணவர்களுக்கும் சீருடைகளை வழங்கியமைக்காக சீன அரசாங்கத்துக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ, தூதரக அதிகாரிகள், கல்வி அமைச்சின் அதிகாரிகள், துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவை அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## யாழில்...

எலிகாய்ச்சல் பரவுவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாகவும் சுகாதார அமைச்சின் தொற்ற நோய் ஆய்வுப் பிரிவின் வைத்தியர் குமுது வீரகோன் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று (11) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையினால் எலிகாய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள், வெள்ளத்தினால் பாதிப்படைந்தவர்கள், அவர்களுக்கு நிவாரணம் வழங்குபவர்கள், கீரைச் செய்கையில் ஈடுபடுவர்கள், சுரங்கத் தொழிலில் ஈடுபடுவர்கள், மண்ணகழ்வில் ஈடுபடுபவர்கள் மற்றும் நீர் விளையாட்டில் ஈடுபடுபவர்கள் இந்த நோயினால் பாதிப்படைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

எனவே, காய்ச்சல், கடுமையான உடல் வலி, கடுமையான தலை வலி, கண் சிவத்தல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 11 மாதங்களில் 10,000 வரையான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். கடந்த வருடம் 9,000 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தார்கள். விவசாயிகளுக்காக நோய் எதிர்ப்பு மருந்தும் வழங்கப்பட்டு வருகிறது. பொதுச் சுகாதார பரிசோதகர்களினூடாக இந்த மருந்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இனங்காணப்படாத காய்ச்சல் நிலைமை பதிவாகியுள்ளது. இதில் சுவாச நோய் அறிகுறியும் பதிவாகியுள்ளது. அதிக மழைவீழ்ச்சி காரணமாக இன்புளுவென்சா,எலிகாய்ச்சல் மற்றும் டெங்கு என்பன பரவலடையக் கூடும். தற்போது இந்த நோய் நிலைமையை அடையாளம் காண்பதற்கான பணிகளை முன்னெடுத்து வருகிறோம் என்றும் குறிப்பிட்டார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (11.09.2024)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 180.7002 | 190.1087 |
| கனேடியன் டொலர் | 200.5495 | 209.3485 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.6554 | 41.2271 |
| யூரோ | 299.5175 | 312.1379 |
| ஜப்பான் யென் | 1.8781 | 1.9549 |
| சிங்கப்பூர் டொலர் | 211.6105 | 221.5008 |
| ஸ்ரேலிங் பவுன் | 363.8592 | 377.9341 |
| சுவிஸ் பிராங்க் | 320.7411 | 336.7151 |
| ஐ.அ. டொலர் | 285.9946 | 294.6048 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 769.3887 |
| குவைட் | குவைட் தினார் | 944.0349 |
| ஓமான் | ஓமான் றியால் | 754.0509 |
| கட்டார் | கட்டார் றியால் | 79.6351 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.2675 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.0388 |

## மேற்கு முனைய...

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திப் பணிகள் அதானி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், இந்த வேலைத்திட்டத்துக்கான அமெரிக்க நிதியுதவியை நிராகரிக்க அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, அமெரிக்க நிதியுதவியை பெறப்போவதில்லை என்றும் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக தமது சொந்த வளங்களை பயன்படுத்தப் போவதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த திட்டம் அடுத்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து முன்னெடுப்பதற்காக நிலைமை இருப்பதால் நிறவனத்தின் மூலதனத்துடன் இந்த திட்டத்துக்கு நிதியளிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அதானி துறைமுகங்கள் மற்றும் SEZ நிறுவனம் நேற்று (11) தெரிவித்துள்ளது. அமெரிக்க சர்வதேச நிதி அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து நிதியுதவிக்கான கோரிக்கை மீளப்பெற்றப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆழமான நீர் கொள்ளளவைக் கொண்ட கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் திட்டங்களுக்கு 553 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி வழங்குவதற்கு அமெரிக்க சர்வதேச நிதி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இணக்கம் தெரிவித்திருந்தது.

இந்த முனையத்தின் அபிவிருத்திப் பணிகளானது அதானி துறைமுக நிறுவனம், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்கிஸ் பி.எல்.சி. மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பன இணைந்து முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்க சர்வதேச நிதி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் நிதியுதவியானது உலக தரம்வாய்ந்த உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களில் அதானி நிறுவனத்தின் செயற்றிறனை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டமாகவும் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நிகழ்நிலை...

சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமொன்று அவசியமில்லை என்று கூறவிளையவில்லை. இருந்தபோதும், பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமொன்று இருக்கும் அதேவேளை அந்த சட்ட நடைமுறையின்போது போதியளவு பாதுகாப்பை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் இதுதொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

அடிப்படை உரிமை பாதுகாப்பை மேம்படுத்த வேண்டுமெனில் நடைமுறையிலுள்ள ஒருசில விடயங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்கமைய, நாட்டில் முறைக்கேடாக பயன்டுத்தப்பட்ட அடக்குமுறை சட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறான அடக்குமுறை கொண்ட சட்டங்களை நீக்கவேண்டியது இந்த அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இந்த அரசாங்கத்தின் முதல் இரண்டு வருடக் காலத்தில் அடக்குமுறை கொண்ட சட்டங்கள் நீக்கப்பட வேண்டும்.

இந்த அரசாங்கத்திலுள்ளவர்கள் சட்டங்களை முறைகேடாக பயன்படுத்தமாட்டார்கள். அதன் காரணமாக அதில் சிக்கல் என்று கூறுகிறார்கள். இதே நிலைப்பாட்டில் முதல் இரு வருடங்களிலும் இருந்துவிட்டால் நாட்டின் சட்டங்களில் எப்போதும் மாற்றம் ஏற்படாது.

முதலாவது நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம். இரண்டாவது பயங்கரவாத தடைச்சட்டம். பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமொன்று அவசியமில்லை என்று கூறவிளையவில்லை. இருந்தபோதும், பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமொன்று இருக்கும் அதேவேளை சட்டத்தினூடாக போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மற்றும் அரச பாதுகாப்பு பிரிவினர் முறைகேடாக பயன்படுத்துவதற்கு இருக்கும் வாய்ப்புகளை நீக்க வேண்டும்.

அதேபோன்று, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். அதிகாரத்தை ஓரிடத்தில் குவிப்பதற்காகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்றால் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வேண்டிய நிறைவேற்று நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டும்.

குறிப்பாக பொலிஸ் துறை மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். அரசியலமைப்பில் 11 ஆவது உறுப்புரையை மீறும் வழக்குகளில் 99 சதவீதமான வழக்குகள் பொலிஸாரினாலேயே தாக்கல் செய்யப்படுகின்றன. பொலிஸ் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். மூன்றாவதாக நீதிமன்றம் பலப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு நீதிமன்றம் சுயாதீனமாக இயங்குவதற்கான வாய்ப்புகள் உருவாக்கி கொடுக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வைத்தியர்களின்...

அதனூடாக வைத்தியர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்வரும் நாட்களில் நாட்டை விட்டு வெளியேறும் கனிஷ்ட, தரம் உயர்த்தப்பட்ட மற்றும் சிரேஷ்ட வைத்தியர்களின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளை விட அதிகரிக்கக் கூடும் என்றும் வைத்திய மற்றும் சிவில் உரிமை தொடர்பான வைத்திய தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் ஜீ.ஜீ.சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

வைத்தியர்களின் சம்பளப் பிரச்சினை குறித்து நேற்று புதன்கிழமை (11) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த ஐந்து வருடங்களில் 2,000 வரையான வைத்தியர்கள் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நாட்டிலிருந்து வெளியேறியிருந்தார்கள். கனிஷ்ட வைத்தியர்கள், தரமுயர்த்தப்பட்ட வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் என சகல பிரிவுகளையும் சேர்ந்த வைத்தியர்கள் நாட்டிலிருந்து வெளியேறியிருந்தார்கள். இந்நிலையில் கடந்த நவம்பர் மாதம் 31 ஆம் திகதியும் வைத்தியத்துறையிலிருக்கும் வைத்தியர்கள் தமது வருமான வரி ஆவணங்களை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வரிகளைச் செலுத்த வேண்டியிருந்தது.

இந்தப் பின்னணியில் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பில் வைத்தியர்கள் மத்தியில் மீண்டும் கருத்துகள் வெளிப்பட ஆரம்பமாகியுள்ளன. வைத்தியர்களுக்கு கிடைக்கும் அடிப்படைச் சம்பளம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. அநேகமாக 40,000 – 80,000 ரூபா என்ற வரையறையிலேயே அடிப்படைச் சம்பளத்தில் மாற்றம் ஏற்படுகிறது. தற்போதைய அரசாங்கத்தின் வரி கொள்கைக்கமைய செலுத்தப்படும் சம்பளத்தில் வருமான வரி குறைப்பும் இடம்பெறுகிறது. மீதமாகும் நிதி வங்கி சேமிப்புக் கணக்குகளில் இருந்தால் அதுவும் வருமான வரிக்கு உட்படுத்தப்படுகிறது. நிலையான கணக்குகளில் நிதி வைப்பிலிடப்பட்டிருந்தால் அதுவும் வருமான வரிக்கு உட்படுத்தப்படுகிறது. அதேபோன்று, வைத்தியர் ஒருவர் செய்யும் முதலீடுகள் அதாவது காணி கொள்வனவு, வாகன கொள்வனவு அல்லது சொத்துக்களை விற்பனை செய்வதுபோன்ற ஒவ்வொரு செயற்பாடுகளின்போதும் வைத்தியர்கள் பெருந்தொகை நேரடி வரி செலுத்த வேண்டியுள்ளது.

இதன் காரணமாக, மாத இறுதியில் வைத்தியர்களின் சேமிப்பும் பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. வைத்தியராக பணியாற்றுவதற்கு பதிலாக வீதியிலிருந்து யாசகம் செய்தால் இதனை விட அதிகம் உழைக்கக்கூடியதாக இருக்குமென்ற நிலைப்பாட்டிலேயே வைத்தியர்கள் இருக்கிறார்கள். வெளிநாடுகளிலுள்ள வைத்தியர்களால் வரிப்பணம் செலுத்த முடியுமென்றால் ஏன் இலங்கையிலுள்ள வைத்தியர்களால் வரி செலுத்த முடியாது என்றும் ஒரு தரப்பினர் கருத்து வெளியிடுகிறார்கள்.

வெளிநாட்டிலுள்ள வைத்தியர்கள் 40 - 50 இலட்சம் ரூபா பெருந்தொகை வரிப்பணத்தை செலுத்தியதன் பின்னர் மிகுதியாகும் பணம் அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல போதுமானதாக இருக்கும். ஆனால், இலங்கையைப் போன்ற நாட்டில் விசேட வைத்திய நிபுணருக்கும் 03 இலட்சம் ரூபா வரையான அதிகபட்ச சம்பளமே கிடைக்கிறது. இந்நிலையில் அந்த நிதியில் அதிக தொகை பணத்தை வரியாக செலுத்தியதன் பின்னர் அவர்களின் கல்வி, சுகாதாரம், குடும்பத்தாரின் கல்வி, சுகாதாரம், சமூக செயற்பாடுகள், போக்குவரத்து என்ற சகல செலவுகளின் அடிப்படையில் அவர்களுக்கு நிதி மீதமாவதில்லை. அதன் காரணமாகவே இந்த நாட்டில் இருப்பதா இல்லை என்று சிந்திக்க ஆரம்பித்துள்ளார்கள்.

எனவே, அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் வைத்தியர்களின் சம்பளம், மேலதிக கொடுப்பனவு மற்றும் வரி தொடர்பான பிரச்சினைகளுக்கு நிலைபேறான தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் கொள்கையை தயாரித்து அதனூடான வைத்தியர்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் பொறுப்பாகும். அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்வரும் நாட்களில் நாட்டை விட்டு வெளியேறும் கனிஷ்ட, தரம் உயர்த்தப்பட்ட மற்றும் சிரேஷ்ட வைத்தியர்களின் எண்ணிக்கை கடந்த ஐந்து வருடத்தை விட அதிகரிக்கக் கூடும். தற்போதும் கிராமிய வைத்தியசாலை கட்டமைப்பு, ஹம்பாந்தோட்டை, கராப்பிட்டி, கண்டி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் பேருவளை போன்ற பிரதேசங்களிலுள்ள அரச வைத்தியசாலைகளை முன்னெடுத்துச் செல்லுமளவுக்கு போதிய எண்ணிக்கையிலான வைத்தியர்கள் இல்லாத நிலைமை நிலவுகிறது.

அந்த நிலைமை மேலும் தீவிரமடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த அரசாங்கத்தில் 20க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் பல்வேறு பதவிகளை வகிப்பதால், வைத்தியர்கள் தொடர்பில் நிலவும் பாதுகாப்பற்ற நிலைமை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

## இளம் வாக்காளர்கள்...

உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி தேச விமுக்தி ஜனதா கட்சியின் உறுப்பினர் நிஹால் டி சில்வா உள்ளிட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையில் சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன் இதனை அறிவித்தார்.

இந்த மனு நேற்று பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ, நீதியரசர்கள் அர்ஜுன ஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 2024ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி இளம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தேவையான சட்டத்திருத்தங்கள் செய்யப்படுகின்றன. இது தொடர்பில் சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு அமைச்சரவை அறிவித்துள்ளது என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

மேலும், ஏற்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் சட்டங்களை திருத்துமாறும் அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி, பொதுமக்களுக்கு இது மிகவும் முக்கியமான வழக்கு என்பதால் ஒவ்வொரு நபரும் அதில் தலையிடும் வகையில் இது குறித்து 03 மொழி செய்தித்தாள்களில் விளம்பரம் வெளியிட உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள், சம்பந்தப்பட்ட மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் உள்ளிட்ட எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டனர். இதையடுத்து, இந்த மனு ஜனவரி 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

## தேங்காய்...

தேங்காய்களை விநியோகித்து வருகிறோம். இதனை பொதுப் பிரச்சினையாக கருதியே இதற்கு நாங்கள் பங்களிப்புச் செய்கிறோம். எங்களைப் போன்றே பெரும் எண்ணிக்கையிலான பெருந்தோட்ட நிறுவனங்கள் கடமைகளை முன்னெடுத்து வருவதாகவும் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைவர் எச்.எம்.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து நேற்று (11) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கையில்,

''நாட்டில் தற்போது நிலவும் தேங்காய் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் வரை திறந்த சந்தையில் தேங்காய் ஏலத்துக்கு விற்பனை செய்வதை இடைநிறுத்த தீர்மானித்துள்ளோம். இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்கும் வகையில் மக்களின் தேவைக்கேற்ப ச.தொ.ச.நிறுவனத்தினூடாக நாடு பூராகவும் தேங்காய்களை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எங்களின் நிறுவனத்தின் கீழ் 85 தோட்டங்கள் இருக்கின்றன. தொடர்ச்சியான விநியோகத்தை வழங்குமாறு அமைச்சும் கோரியுள்ளது. எனவே, தொடர்ந்து நாளொன்றுக்கு ஒரு இலட்சம் தேங்காய்களை விநியோகிக்கக் கூடியதாக இருக்கும்.

கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பகுதிகளிலேயே இவ்வாறு தேங்காய் தட்டுப்பாடு நிலவுகிறது. கொழும்புக்கும் 130ரூபாவுக்கு தேங்காய் விநியோகிக்கப்படுகிறது'' என்றும் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதியின்...

விலைக்கும் விற்பனை செய்யுமாறு ஜனாதிபதி அறிவிப்பு வழங்கியிருந்தார். அடுத்த பத்து நாட்களுக்கு அவதானமாக செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, அரிசி நிர்ணய விலைக்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த திங்கட்கிழமை (09) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைவர் சமரக்கோனினால் வெளியிடப்பட்டிருந்ததுடன் நிர்ணய விலையின் கீழ் அரிசி விற்பனை செய்யாத வர்த்தகர்களை கண்டறிவதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியிருந்தன.

இதேவேளை, இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் செயற்பாடுகளிலும் பின்னடைவும் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வரி அதிகரிப்பு இதில் தாக்கம் செலுத்தியுள்ளதாகவும் அறியமுடிகிறது. இறக்குமதி செய்யப்படும் அரிசி கிலோவுக்கு 65 ரூபாவை வரியாக அரசு விதித்துள்ளதால் அரிசியை இறக்குமதி செய்து நட்டத்தில் விற்க முடியாதென வர்த்தகர்கள் பலர் கைவிரித்துள்ளனர்.

அரிசி இறக்குமதிக்காக விண்ணப்பித்த கொள்வனவுகளை வர்த்தகர்கள் பலர் நேற்று இரத்துச் செய்துள்ளதாகவும் அறியக்கிடைத்தது. அதற்கமைய, அரிசி இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டதன்படி எதிர்வரும் நாட்களில் குறைந்தளவான அரிசியே நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையின் அடிப்படையில் தற்போது கையிருப்பில் இருக்கும் அரிசியை மாத்திரம் நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு மாத்திரமே விநியோகிக்க கூடியதாக இருக்குமென்றும் மரந்தகஹமுல அரிசி மொத்த விற்பனை சங்கத்தின் தலைவர் பீ.கே.ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு கிலோ நெல்லை 156 ரூபா என்ற அடிப்படையிலேயே விவசாயிகளிடமிருந்து சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்துள்ளார்கள். எனவே, புதிய விலை நிர்ணயத்துக்கமைய அரிசியை உற்பத்தி செய்து விநியோகிக்க முடியாது. இருந்தபோதும் தற்போது இருப்பில் இருக்கும் அரிசியை மாத்திரம் நிர்ணய விலையின் அடிப்படையில் நுகர்வோருக்கு விநியோகிப்போம். இந்த அரிசி தொகை எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கே போதுமானதாக இருக்கும்.

இருந்தபோதும் சந்தையில் நெல் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஒரு கிலோ நெல் 130 ரூபா என்ற அடிப்படையில் கிடைத்தால் மாத்திரமே அரசாங்கத்தின் நிர்ணய விலையின் அடிப்படையில் அரிசியை பெற்றுக்கொடுக்க கூடியதாக இருக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்வரும் நாட்களில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகளை மூட நேரிடும். தற்போதிருக்கும் உற்பத்திகளை விற்பனை செய்துவிட்டால், அடுத்த உற்பத்தி செயற்பாடுகளுக்கு நெல் கிடைக்குமென்று நம்பவில்லை. நெற்தொகை வைத்திருப்பவர்கள் இன்னும் நெல்லுக்கான விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

மரந்தகஹமுல வியாபாரிகளிடம் இருந்த நெல் தொகையும் ஜனாதிபதியின் அறிவிப்பை தொடர்ந்து சந்தைக்கு விநியோகித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது. நாளாந்தம் சந்தையில் பெற்றுக்கொள்ளப்படும் நெல் தொகை மாத்திரமே இருக்கிறது. சந்தையிலும் நெல்லுக்கு தட்டுப்பாடு இருக்கிறது. சந்தையில் இருக்கும் ஒரு மூடை நெல் 10,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு நெல்லை கொள்வனவு செய்து அரிசி விற்பனை செய்வதால் வருமானம் எதுவும் கிடைக்காது. தற்போதைய நிலைமையில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

ஒருகிலோ நெல்லை 156 ரூபாவுக்கு கொள்வனவு செய்து 225 ரூபாவுக்கு அரிசியை விற்பனை செய்வது என்றால் ஒரு கிலோ அரிசிக்கு 30 ரூபா நட்டம் ஏற்படுகிறது. இருந்தபோதும் அரசாங்கத்தின் அறிவிப்பின்படி இருப்பில் இருக்கும் அரிசியை விற்பனை செய்ய முடிவு செய்வோம். சந்தையில் நெல்லுக்கு தட்டுப்பாடு இருப்பதாலும் இருக்கும் நெல்லும் அதிக விலைக்கு விற்பனையாகின்றமையினாலும் நெல்லை கையிருப்பில் வைத்திருப்பவர்கள் சந்தைக்கு விநியோகிக்காமல் இருப்பதாலும் நெல் வைத்திருப்பவர்களிடம் இருக்கும் நெல்லை சந்தைக்கு விநியோகிக்க அரசாங்கமும் பாவனையாளர் அதிகார சபையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலைமை நீடித்தால் அரிசி உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதுடன் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடும் கடுமையாகும். எதிர்வரும் நாட்களில் அரிசி ஆலைகளை முன்னெடுத்துச் செல்வதென்றால் அரிசி நிர்ணய விலையின் அடிப்படையில் நெல்லை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, சிறிய கடைகளின் உரிமையாளர்களுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர்களால் இந்த நட்டத்தை சமாளிக்க முடியாது. எனவே, விற்பனை நிலையங்களிலிருந்து அரிசியை விற்பனை செய்துகொள்வதற்கும் ஐந்து நாட்களாவது வழங்கப்பட வேண்டும் என்று மரந்தகஹமுல அரிசி மொத்த விற்பனை சங்கம் அறிவித்துள்ளது. ஆலையிலிருந்து 215 ரூபாவுக்கும் 225 ரூபாவுக்கும் அரிசியை விநியோகித்தும் நேரடியாக சில்லறைக் கடை உரிமையாளர்களுக்கு அரிசி கிடைப்பதில்லை. இடைநிலை தரகர்களினூடாகவே அரிசி விநியோகிக்கப்படும். எனவே, ஐந்து ரூபா என்ற அடிப்படையில் போக்குவரத்து வசதிகளை வழங்கி சிறிய கடை உரிமையாளர்களுக்கு அரிசியை விநியோகிக்க முடியாது என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## பெயர்மாற்றம்

**நுவரெலியா மாவட்டம் நோவூட் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மொக்கா கிராம உத்தியோகத்தர் பிரிவு 320/q ல் மொக்கா தோட்ட எடம்ஸ்பீக் பிரிவில் வசிக்கும் அடையாள அட்டை இலக்கம் 200734601184 பிறப்பு சான்றிதழ் இலக்கம் 3235 கொண்ட மதியழகன் பிரேமநந்தன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை மதியழகன் பிரேம் மித்யோ (Madhiyalagan Prem Mithyo)என மாற்றம் செய்து உள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.**

**மதியழகன் பிரேம் மித்யோ.**

# பெருந்தோட்டப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பு; அமைச்சு எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லை

## பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்



எஸ்.கணேசன்

''பெருந்தோட்டப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகளை அமைப்பது தொடர்பில் எந்தவொரு முடிவையும் அமைச்சு எடுக்கவில்லை" - என்று பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (11) நடைபெற்ற, 545 குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டப்பகுதிகளில் தொடர்மாடி குடியிருப்புகளை அமைப்பதற்குரிய பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக எமது அமைச்சின் செயலாளர் கூறினார் எனவும் மாடி வீடுகள் அமைக்கப்படவுள்ளன எனவும் சமூகவ லைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

தேசிய மக்கள் சக்திமீது சேறு பூசுவதற்காக இன்று பல குழுக்களும் தோல்வியடைந்த கட்சிகளும் செயற்பட்டு வருகின்றன. சொல்லாததை சொன்னதாகவும் செய்யாததை செய்ததாகவும் கருத்துகளை பரப்பி வருகின்றனர்.

அவ்வாறான எந்தவொரு முடிவையும் அமைச்சு எடுக்கவில்லை. எனவே, வதந்திகளை பரப்பி மக்களை அச்சப்படுத்தாமல், உண்மையை எடுத்துக்கூறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி இன்னும் ஒரு வருடம்தான் செல்லும் என அரசியல் ரீதியில் வங்குரோத்தடைந்தவர்கள் கூறிவருகின்றனர். மக்கள் எந்த நோக்கத்துக்காக வாக்களித்தார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும்வரை எமது ஆட்சியை கவிழ்க்க முடியாது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கும் மிக விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம்'' என்றார்.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் கார்த்திகை மாதம் 27ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** — மனத் தைரியத்துடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**ரிஷபம்** — குடும்ப உறவுகளுடன் கவனமாக நடந்த கொள்ளுங்கள். தேவையற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம்.

**மிதுனம்** — உங்கள் காதலியுடன் உல்லாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள். தொழில், வியாபார இலாபம் உண்டு.

**கடகம்** — நீங்கள் எதிர்பார்த்த தொழில் அமையும். குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**சிம்மம்** — கடின உழைப்பால் உடல் அசதி, ஏதோ பயத்தினால் மனம் தடுமாறிக் கொண்டிருக்கும்.

**கன்னி** — உடல், மனம் சோம்பிக் காணப்படும். அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**துலாம்** — விவாகப் பேச்சுக்களால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும். கடல் தாண்டிய பயணத்தால் நன்மை உண்டு.

**விருச்சிகம்** — நீண்ட நாள் நோயிலிருந்து விடுதலை. சத்துருக்களால் தன இலாபங்கள் உண்டு.

**தனுசு** — தொழில் ரீதியான நட்டங்கள் ஏற்படும். குழந்தைகளால் செலவுகள் ஏற்படும்.

**மகரம்** — யாரையும் நம்புவதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது தவிப்பீர்கள். எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படலாம்.

**கும்பம்** — உங்களுக்கான நகை, உடைகளை வாங்குவீர்கள். துணிவோடு நடைபோடுவீர்கள்.

**மீனம்** — கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாது திண்டாடுவீர்கள். மனத் தைரியம் குன்றி சோம்பலுடன் காணப்படும்.

| | |
|---|---|
| **திதி** | : துவாதசி மு.இ.10.26 வரை பின் திரயோதசி |
| **நட்சத்திரம்** | : அசுவினி மு.ப.9.52 வரை பின் பரணி |
| **பிறை** | : வளர்பிறை |
| **யோகம்** | : அமிர்த யோகம் மு.ப.9.52 வரை பின் சித்த யோகம் |
| **வார சூலை** | : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : காலை-9.13 –12.13 மணி வரை மாலை- 4.13 – 6.13 மணிவரை |
| **ராகு காலம்** | : 1.43 – 3.13 மணிவரை |
| **எமகண்டம்** | : 6.13 - 7.43 மணிவரை |
| **குளிகை** | : 9.13 - 10.43 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | : கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

### அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்

இன்று முற்பகல் 9.52 மணி வரை

பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

இன்று முற்பகல் 9.52 மணிக்கு மேல்

அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.

**விசேட தினம்** : பரணி தீபம்



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# அரசின் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்தோர் மீது சட்ட நடவடிக்கை

எஸ்.கணேசன்

நுவரெலியா மாவட்டத்தில் அரசின் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த பல வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு நாட்டரிசி விற்பனை செய்த பல வர்த்தகர்களுக்கு எதிராக நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக நேற்று (11) சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அதன் தலைவர் அமில ரத்நாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா, நானுஓயா, ரதெல்ல மற்றும் அக்கரப்பத்தனை, ஹோல்புறுக் ஆகிய பகுதிகளில் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தகர்களை கைதுசெய்வதற்காக குறித்த அதிகாரிகள் நேற்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நுவரெலியா மாவட்டம் முழுவதும் இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் தொடரும் என தலைவர் அமில ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

# வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தில் திருட்டு; காவலாளிகள் கடமையிலிருந்தபோதே கைவரிசை

வாழைச்சேனை மேலதிக நிருபர்

வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் சான்றுப் பொருட்கள் வைக்குமிடத்தில் நேற்று முன்தினம் (10) திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் நீதிமன்ற காவலாளி ஆகியோர் கடமையில் இருந்தபோது குறித்த வளாகத்தில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொருட்கள் வைக்கப்பட்டிருந்த அறையொன்றில் சத்தம் கேட்டதை தொடர்ந்து சத்தம் கேட்ட அறையை நோக்கிச் சென்ற காவலாளிகளை கண்டு திருடன் தப்பியோடியுள்ளான்.

இதன்போது அறையின் கதவு திறந்து காணப்பட்டுள்ளது. உடனே குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பதில் பொலிஸ் பரிசோதகரின் கவனத்துக்கு தெரியப்படுத்தியதை அடுத்து நீதிமன்ற சான்றுப்பொருட்கள் வளாக பொறுப்பதிகாரி வரவழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அங்கு வைக்கப்பட்டிருந்த மதுபான போத்தல்கள் அடங்கிய பெட்டிகள் சில திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தனர். குறித்த வளாகத்தில் முன்பும் இதுபோன்ற திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தளபாடங்களை தருவதாகக்கூறி யாழில் 20 இலட்சம் ரூபா நிதி மோசடி

பு.கஜிந்தன்

தளபாடங்களை தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்தில் பெருமளவான நிதிமோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்று (11) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர், 20 இலட்சத்து 32ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை தருவதாகக் கூறி, வவுனியாவில் உள்ள நபர் ஒருவரை ஏமாற்றி பணத்தைப் பெற்றுக்கொண்டு ஒரு மாத காலமாக தலைமறைவாக இருந்துள்ளார்.

இந்நிலையில், பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கோண்டாவில் பகுதியில் வைத்து பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பொன்று நேற்று முன்தினம்(10) கண்டியில் இடம்பெற்றுள்ளது. இதன்போது சமகால விவகாரங்கள் குறித்து பரஸ்பரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.**


## வாகன சந்தை — நாரம்மல

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NW BGK-55xx | BAJAJ | CT 100 |
| NW BBQ-70xx | BAJAJ | CT 100 |
| NW BEV-79xx | BAJAJ | CT 100 |
| NC BIE-07xx | BAJAJ | platina |
| NW BDU-05xx | BAJAJ | CT 100 |
| NW BFJ-31xx | BAJAJ | CT 100 |
| NW BGJ-59xx | BAJAJ | PULSAR 150 |
| NW BEZ-54xx | BAJAJ | CT 100 |
| NW BFL-24xx | BAJAJ | CT 100 |
| NW BDZ-16xx | BAJAJ | CT 100 |
| NW BFC-08xx | BAJAJ | PULSAR 150 |
| NW BDT-16xx | BAJAJ | PULSAR 150 |
| NW BED-16xx | BAJAJ | PULSAR 150 |
| NW BEJ-52xx | BAJAJ | PULSAR 150 NS |
| NW BAQ-89xx | BAJAJ | DISCOVER 100 |
| NW BHD-23xx | HONDA | DIO |
| NW BGB-48xx | HONDA | DIO |
| NW BGR-77xx | HONDA | DIO |
| NW BGI-22xx | HONDA | DIO |
| NW BEX-87xx | HONDA | DIO |
| NW BFA-80xx | HONDA | DIO |
| NW BEW-41xx | HONDA | DIO |
| NW BDQ-29xx | HONDA | DIO |
| NW BCP-89xx | HONDA | DIO |
| NW BFB-10xx | HONDA | DIO |
| CP BFP-55xx | HONDA | DIO |
| CP BGQ-11xx | HONDA | DIO |
| NW BFH-57xx | HONDA | DIO |
| NW BHY-85xx | HONDA | DIO |
| NW BIO-36xx | HONDA | DIO |
| NW BGN-67xx | HONDA | DIO |
| NW BCT-52xx | HONDA | DIO |
| NW BHN-25xx | HONDA | DIO |
| NW BAZ-34xx | HONDA | DIO |
| NW BEU-42xx | HONDA | DIO |
| NW BGP-62xx | HONDA | DIO |
| NW BGO-20xx | HONDA | DIO |
| NW BHV-92xx | HONDA | DIO |
| NW BHV-80xx | HONDA | DIO |
| NW BEW-77xx | HONDA | DIO |
| NW BHB-08xx | YAMAHA | FZ 2 |
| NW BHU-00xx | YAMAHA | RAY-ZR |
| NW BHG-97xx | YAMAHA | RAY-ZR |
| NW BHZ-25xx | YAMAHA | RAY-ZR |
| NW BFZ-26xx | YAMAHA | FZ 2 |
| NW BGZ-11xx | YAMAHA | RAY-ZR |
| CP BCY-80xx | TVS | WIGO |

இடம்:—இல: 91, குருநாகல் வீதி, நாரம்மல.

பார்வையிடும் திகதி:—13.12.2024(காலை 8.30 முதல்10.30 வரை)
மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:—13.12.2024 காலை 10.30 மணிமுதல்

விஸ்வா:—0774787096 பண்டார:—0710773722

துரிதஅழைப்பு:—0117308080 வட்ஸ்அப்:— 0710356125

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

நிபந்தனைக்கு உட்பட்டது

AMF அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663





தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2024 டிசம்பர் 12ஆம் திகதி, வியாழக்கிழமை

# சர்ச்சைக்குள்ளாகியுள்ள சபாநாயகரின் தகைமை

சபாநாயகர் அசோக ரன்வலவின் கல்வித் தகைமை தொடர்பில் சர்ச்சைகள் எழுந்து கொழும்பு அரசியலை பரபரப்பாக்கியுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் இலங்கை பாராளுமன்ற இணையதளம் அவரது சுயவிவரத்திலிருந்து ‘கலாநிதி’ என்ற தலைப்பை நீக்கியுள்ளது.

முன்பு ‘கலாநிதி அசோக ரன்வல’ எனக் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், இப்போது அவரது பெயர் ‘கௌரவ அசோக ரன்வல எம்.பி’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம், அவர் கலாநிதி பட்டம் பெற்றதாகக் கூறப்படுவது சட்டபூர்வமானதா என்பது குறித்து மேலும் சந்தேகங்களை எழுப்புகிறது.

சபாநாயகரின் சுயவிவரத்திலிருந்து ‘கலாநிதி’ என்ற குறிப்பை நீக்கும் வகையில் கடந்த 48 மணி நேரத்துக்குள் இணையதளம் புதுப்பிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும், காப்பகப்படுத்தப்பட்ட பதிப்புகள் மற்றும் Google தேடல் முடிவுகளில் இன்னும் கலாநிதி அசோக ரன்வல என்றே காண்பிக்கின்றன.

சமூக ஊடக ஆர்வலர்கள் பேஸ்புக்கில் அவரது கல்வித் தகைமைகள் குறித்து கேள்வி எழுப்பியதையடுத்து சர்ச்சை வெடித்தது. இதையடுத்து, இந்த விடயத்தில் ஜே.வி.பியும் சபாநாயகரும் பொறுப்புக்கூற வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுத்தன. முன்னாள் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, சிரேஷ்ட விரிவுரையாளர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி ஆகியோர் சபாநாயகர் பட்டத்தை நிரூபிக்குமாறு அரசுக்கு சவால் விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் சபாநாயகர் பதிலளிக்கவில்லையென்றால் தேசிய மக்கள் சக்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட அசோக ரன்வல, கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை கம்பஹா மாவட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினராக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய அவர், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் உள்ளார். இவர் பியகம, யதிஹேன ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் கம்பஹா, ஹேனேகம மத்திய கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்றுக்கொண்டார். மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இரசாயன பொறியியல் பட்டதாரியான சபாநாயகர், பியகம பிரதேச சபை மற்றும் மேல் மாகாண சபையின் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு மக்கள் பணியை ஆரம்பித்திருந்தார். ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக்கழகத்தில் உயிரியல் இரசாயன கலாநிதிப் பட்டத்தையும் ரன்வல பெற்றுள்ளதாக பாராளுமன்ற ஊடகப்பிரிவு அப்போது செய்தி வெளியிட்டிருந்தது.

மேல் மாகாண சபையில் உறுப்பினராக இருந்தபோது , சப்புகஸ்கந்த பொலிஸ் நிலைய குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரியை மிரட்டினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2018 ஆம் ஆண்டு ரன்வல, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார். 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அசோக்க ரன்வல அதில் தோல்வியைத் தழுவியிருந்தார்.

இப்போது புதிய அரசாங்கத்துக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் இந்த விடயமும் சேர்ந்து தலைவலியை கொடுத்திருக்கிறது. சபாநாயகர் பதவியென்பது நாடொன்றின் உயர்மட்டப் பதவி; கண்ணியம்மிக்க கதிரை என்பதால் அதற்கான பொறுப்பிலிருந்து எவரும் தவறிவிட முடியாது. கடந்தகாலங்களில் சபாநாயகர் பதவிகளில் இருந்த எவருக்கும் இப்படியான சர்ச்சைகள் ஏற்படவில்லையென்பதால் இந்த விடயத்தில் அரசு மேற்கொள்ளப்போகும் பிரதிபலிப்பை நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியானது ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை பற்றியெல்லாம் பேசியது. அரசியல்வாதிகளின் நேர்மைத்தன்மை , சிறந்த நிர்வாகம் என்றெல்லாம் பேசிய தேசிய மக்கள் சக்தி இப்போது தன்னை நிரூபிக்க வேண்டிய நேரம் வந்திருக்கிறது. சபாநாயகர் அசோக ரன்வல, கலாநிதி அதாவது, டாக்டர் பட்டம் பெற்றார் என்று சொல்லப்படும் நிலையில், ஜப்பான் வசீடா பல்கலைக்கழகம் அப்படியானவர் அங்கு கற்கவில்லை என்று கூறியிருக்கிறது. ஏற்கனவே டாக்டர் என்று பாராளுமன்ற பெயருக்கு முன்னால் இட்டிருந்த சபாநாயகர், அதனை கௌரவ என்று பாராளுமன்ற இணையதளத்தில் மாற்றியிருக்கிறார்.

இப்போது அரசுக்கு மூன்று தேர்வுகள் உள்ளன.

01. டாக்டர் பட்டத்துக்கான நியாயமான விளக்கத்தைக் கொடுக்க வேண்டும்.

02. சபாநாயகர் பதவி விலகி வேறு ஒருவரை நியமிக்க இடமளிக்க வேண்டும்.

03. கலாநிதி பட்டம் கிடைத்த பல்கலைக்கழகம் வேறொன்றா என்பதை அறிவிக்க வேண்டும்.

இவற்றைச் செய்து மக்கள் முன்னுள்ள சந்தேகத்தை சபாநாயகரும் அரசும் உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் ஏனையோர் போலியான கல்விச் சான்றிதழ்களை அல்லது பட்டங்களை வைத்திருக்கிறார்களா என்பதையும் ஆராய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எப்படியோ கிடைக்காத கலாநிதி பட்டத்தை கிடைத்திருப்பதாக சபாநாயகர் கூறியிருப்பாரானால், அது தவறு. அதேசமயம், சபாநாயகர் தவறிழைத்தும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் மேலுள்ள மக்கள் நம்பிக்கை மேலும் சரிவையே தந்துவிடும்.



# பாராட்டும் பண்பு!

ஒரு செயலை ஈடுபாட்டோடு செய்கிற எவருமே அச்செயலை அடுத்தவர்கள் பாராட்டவேண்டுமென எதிர்பார்ப்பதில் எந்தத் தவறுமில்லை. பாராட்டு என்பது வளர்கிற பயிருக்கு வார்க்கிற மழைநீர் போன்றது. கிணற்றுநீர் பாய்வதைவிட மழைநீர்த் தெளியல் ஒவ்வொரு பயிரையும் செழித்து வளர்வதற்கான ஊக்கச் சாரல் ஆகும். அதைப்போல கடமையாற்றுகிற ஒவ்வொருவரும் அந்தக் கடமை செம்மையாகச் செய்யப்பட்டிருக்கிறதென்று முதலில் வருகிற பாராட்டையே அடிப்படையானதாக விரும்புகின்றனர். பலனை எதிர்பார்ப்பதென்பது இரண்டாவது நிலையிலேயே வைத்து எண்ணப்படுகிறது.

பாராட்டென்பது மனித வாழ்வியலின் தலைமையான பண்பாடாகும். எந்தவொரு செயலிலும் நன்மையுமிருக்கும், தீமையுமிருக்கும். அதேபோல, எந்தவொரு மனிதரிலும் நல்ல குணங்களும் இருக்கும், தீய குணங்களும் இருக்கும். அவற்றில் தீயவற்றைப் புறந்தள்ளி விட்டு, நன்மையானவற்றையே கருதத் தொடங்கி விட்டால் எல்லோரையும் பாராட்டுகிற நற்குணம் நம்மையறியாமலேயே நம்மிடம் வந்து ஒட்டிக்கொள்ளும்.

பாராட்டென்பது ஒரு செயலை ஏற்றுக்கொள்வது. ஏற்றுக்கொண்ட செயலின் மதிப்பை உணர்ந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாகும். எந்தவொரு செயலும் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தால் அதனை உளமார அங்கீகரிப்பதுதான் பாராட்டு. பாராட்டுவதன் மூலம் அந்தச் செயலோடு நாம் ஒத்துப்போகிறோமென்பதும் செயலைச் செய்தவருக்கு நன்றியுணர்வோடு இருக்கிறோமென்பதும் வெளிப்படுத்தப்படுகிறது.

பாராட்டை இந்த உலகமே எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. அதனை முதலில் நாம் நமது வீட்டிலிருந்து தொடங்குவோம். நாள்தோறும் சமைத்து வேளாவேளைக்கு உணவு பரிமாறுகிற தாய்க்கும் மனைவிக்கும் நாம் எப்படி நன்றியுள்ளவர்களாக இருக்கப்போகிறோம்? அதுதான் வேலைக்குப் போய்ச் சம்பாதித்து வந்து, பணத்தையும் பொருட்களையும் வீட்டில்வந்து கொட்டத்தானே செய்கிறோம். இதில் சமைப்பதற்கு எதற்கு நன்றியுணர்வு? - என்று சிலர் கேட்கலாம். ஆனால், வேலைக்குப் போவதும் கடுமையாக உழைத்துச் சம்பாதிப்பதும் உடல் சார்ந்த கடமையென்றாலும் வீட்டிலேயே அடைபட்டு, சதா குடும்ப உறுப்பினர்கள் நினைவாகவே சமைப்பதும் வீட்டு வேலைகளைப் பார்ப்பதும் இதயம் சார்ந்த சேவையாகும். அதிலும், தற்காலத்தில் பெண்களும் வெளியில் வேலைக்குச் செல்லத் தொடங்கிவிட்டனர். ஆனாலும், வீட்டுவேலைகள் இன்னமும் அவர்கள் வசம்தான் இருக்கின்றன. எனவே, வீட்டில் உணவருந்தும்போது இயந்திரத்தைப்போல அமர்ந்து உணவை வயிற்றுக்குள் நிரப்பிக் கொள்ளாமல், உணவுச் சுவையைக் கொஞ்சம் கூடுதலாகவே பாராட்டிப் பாருங்கள்! பிறகு நாளடைவில் பாராட்டுப் பெருகப் பெருக, சாதாரண சமையல்கூட ராஜவிருந்தாகச் சுவை கூடிப்போகும். பாராட்டு என்பது அன்பையும் ஈடுபாட்டையும் பெருகச் செய்கிற மந்திரச் சொல்லாகும்.

வீட்டில் வளருகிற மழலையின் ஒவ்வொரு சொல்லையும் பாராட்டிப் பாருங்கள். அவர்கள் பேசுவதெல்லாம் விரைவில் திருவாசகமாக மாறிப்போகும். பிள்ளைகள் மதிப்பெண் குறைவாக எடுத்திருந்தாலும், அடுத்தமுறை அதிகம் எடுக்க வாழ்த்துகள்! என்று வாழ்த்திப் பாருங்கள். மகிழ்ந்து போவார்கள். அடுத்தமுறை அவர்களாகவே முயன்று மதிப்பெண்களை அள்ளிக்கொண்டு வருவார்கள். எந்தச் சூழ்நிலையிலும், ‘‘நீ எங்கே படிக்கப்போகிறாய்! மாடுமேய்க்கத்தான் லாயக்கு!"- என்று நீங்கள் பெற்ற குழந்தைகளை நீங்களே சபிப்பதுபோல் திட்டிவிடாதீர்கள். அவர்கள் சோர்ந்து போவார்கள்.

பொதுவாகவே இல்லமாயினும் சரி, அலுவலகமாயினும் சரி,கோபமாகத் திட்டிக்கொண்டே இருந்தால்தான் வேலை நடைபெறும். எல்லோரும் அச்சத்தோடு காரியத்தைக் கச்சிதமாகச் செய்வார்கள் என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறோம். உண்மையில் அது தவறு. பாராட்டும் செயலே இனிய சொற்களை மூலதனமாகக் கொண்டு, நேர்முறை அதிர்வுகளைச் சொல்லிலும் செயலிலும் இருதரப்பிலும் ஏற்படுத்தும் வல்லமை வாய்ந்தது.

சரியாகச் செய்திருந்தால் பாராட்டுவதும் குறையாகச் செய்திருந்தால் திருத்திக்கொள்ள உதவும் வண்ணம் அறிவுரை கூறுவதும் நல்ல முறைமை தான். ஆனால், எதுவுமே செய்யாமல் சோம்பேறியாகவே அமர்ந்திருப்பவரை எப்படிப் பாராட்டி ஊக்குவிப்பது?. இது நல்ல கேள்விதான். வெறுமனே அமர்ந்திருந்தால் எதுவுமே கிடைக்கப்போவதில்லை என்பதை அவர்கள் உணரும்வண்ணம் உணர்த்தி ஊக்குவிக்க வேண்டும். எதைச் செய்தாலும் அது செம்மையாக முடிவதில்லை. தவறாகவே நடந்துவிடுகிறதென்று விரக்தியில் மனம் தளர்ந்து போய் நிற்பவர்களிடம் முதலில் நீங்கள் செயலில் ஈடுபடுங்கள். அது செம்மையானதா, சீரற்றதா என்பதைப் பிறகு பார்த்துக் கொள்வோமென்று செயற்பட ஆற்றுப்படுத்துங்கள். செயலாற்றத் தொடங்கத் துணிச்சல் வந்துவிட்டால், பிறகு எந்தக் காரியமும் தோல்வியில் முடிவதில்லை. நிறைவில் அது பாராட்டையே நல்கிநிற்கும்.

பாராட்டு சக மனிதர்களைத் தன்னம்பிக்கை உள்ளவர்களாக உயர்த்தும். தம்முடைய சிந்தனையிலும் செயலிலும் ஒரு பூரணத்துவம் நிறைந்திருப்பதாகப் பாராட்டுப் பெறுபவர் நினைக்கும்போது, அவரது அடுத்தடுத்த செயல்களும் நிச்சயம் பாராட்டும்படியாகவே சிறக்கும். அந்த வகையில், நிறுவனம் சார்ந்த உற்பத்திகளும் வெற்றிச் சாதனைகளைக் குவிக்கும்.

எல்லோரும் பணியாற்றுகிறோம். இல்லங்களில், அலுவலகங்களில், நிறுவனங்களில், தொழிற்சாலைகளில், கலை, இலக்கியம், கல்வி, அரசியல் என்று பல்வேறு துறைகளில் நம் பணி தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

கடமைக்காகப் பணியாற்றுகிறோம் என்று பெரும்பாலானோர் கருதி உழைக்க, ஒரு சிலரே ஆத்ம திருப்திக்காகப் பணியாற்றுகிறோம் என்று கூறுகிறார்கள். கடமைக்காக உழைப்பதென்பது வேறு. ஆத்ம திருப்திக்காகப் பணியாற்றுவதென்பது வேறு. கடமைக்காகப் பணியாற்றுபவர்கள் சம்பளத்துக்காக மட்டுமே உழைப்பவர்கள். கொடுத்த வேலைக்குமேல் ஓர் இம்மியளவுகூடக் கூடுதலாக உழைப்பதற்கு இவர்கள் சம்மதிப்பதில்லை. ஆத்ம திருப்திக்காக உழைப்பவர்களும் ஒருவகையில் சம்பளத்துக்காக வேலை செய்பவர்கள்தான். என்றாலும், அவர்கள் நிச்சயம் பாராட்டை எதிர்பார்ப்பவர்களாக இருப்பார்கள். அதற்கேற்ற வண்ணம் செய்நேர்த்தியுடன் அழகியலோடு பணிகளைச் செய்து முடித்திருப்பர்.

பாராட்டுக் கிடைக்குமெனும் எதிர்பார்ப்பு எந்தக் கடினப் பணியையும் இலகுவாக்கிவிடுகிறது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மறைந்திருக்கும் தாழ்வு மனப்பான்மைகளை அகற்றித் தன்னம்பிக்கையில் தளும்பி நிற்கும் மனிதர்களாகப் பாராட்டு மாற்றிவிடுகிறது.

எல்லைப் பகுதியில் நடந்த ஒரு சண்டையில் ஓர் இராணுவ வீரன் வீரமரணம் அடைந்து விடுகிறான். சொந்த ஊரில் நல்லடக்கம் செய்வதற்காக அவனது உடல் ஊருக்குக் கொண்டுவரப்படுகிறது. உற்றார், உறவினர், உடன்படித்தோர், ஆசிரியர்கள், ஊர்மக்கள் என அந்தப்பகுதியே திரண்டுவந்து உயிர்நீத்த இராணுவ வீரனுக்கு அஞ்சலி செலுத்திக்கொண்டிருக்கின்றது. வீரனின் பெற்றோர் அந்தக் கூட்டத்தில் நின்றிருந்த செல்வி டீச்சரைத் தனியே அழைத்து பலமுறை கிழிந்து ஒட்டுப் போடப்பட்டிருந்த ஒரு தாளை வழங்குகிறார்கள். அந்தத் தாள் பலமுறை மடித்து விரித்துப் பயன்படுத்தப்பட்டிருப்பதால், கிழிந்த மடிப்புகளில் டேப்புகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. தன் மகன் எல்லையில் கொல்லப்படும்போது, அவனது கால்சட்டைப் பையில் இருந்த பர்ஸில் இந்தக் காகிதம் பத்திரப்படுத்தப்பட்டிருந்ததாகப் பெற்றோர் கூறினர். செல்வி டீச்சர் பிரித்துப் பார்த்த தாளில் அவரது கையெழுத்தில் பக்கம் முழுவதும் நிறைய எழுதப்பட்டிருக்கிறது.

செல்வி டீச்சர், இறந்த வீரனின் ஐந்தாம் வகுப்பு ஆசிரியை. வகுப்பில் நாற்பது குழந்தைகள். வகுப்புக்கு வந்த முதல்நாள் நாற்பது வெள்ளைத் தாள்களை ஒவ்வொரு மாணவர் கையிலும் கொடுத்து, ‘‘உங்கள் வகுப்பில் உங்களோடு பயிலும் உங்கள் நண்பர்கள் பெயர்களை ஒருகோடு இடைவெளி விட்டு ஒவ்வொருவரும் எழுதிக்கொள்ளுங்கள். எழுதிய பிறகு ஒவ்வொரு நண்பன் பெயருக்கும் நேராக அவனிடம் உங்களுக்குப் பிடித்த அவனது ஒரு நல்ல குணத்தை மட்டும் எழுதுங்கள்’’- என்றார். எல்லோரும் எழுதிக் கொடுத்த பிறகு அந்தத் தாள்களை வீட்டுக்கு எடுத்துச்சென்ற செல்வி டீச்சர், ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனித் தாள்களைப் போட்டு, அவனைப்பற்றிய நல்ல குணங்களாக மற்ற மாணவர்கள் கருதுவனவற்றையெல்லாம் தொகுத்துப் பட்டியலிட்டு எழுதிக் கொண்டு வந்து அவரவருக்குத் கொடுத்துவிட்டார்.

வாங்கிப் பார்த்த ஒவ்வொரு மாணவனுக்கும் ஆச்சரியம். நாம் உண்மையிலேயே இவ்வளவு நல்லவர்களா என்று புளகாங்கிதம் அடையத் தொடங்கிவிட்டனர். இதுவரை எப்படியோ, இனிமேலாவது சக நண்பர்கள் பாராட்டியபடி நாம் நிச்சயம் நல்லவர்களாக வாழவேண்டும் என மனதார உறுதியுடன் செயற்படத் தொடங்கிவிட்டனர். அன்று ஐந்தாம் வகுப்பில் செல்வி டீச்சர் கைப்பட எழுதித் தந்த அந்தப் பாராட்டுக் காகிதம்தான், இன்றுவரை அந்த வீரனை உத்வேகப்படுத்தி, இந்த நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்யுமளவுக்குத் தூண்டியிருக்கிறது.

பாராட்டுவதென்பது எதையாவது பாராட்டுவது. எல்லாவற்றையும் பாராட்டுவதென்பது கிடையாது. கண்ணை மூடிக்கொண்டு பாராட்டுவது பாராட்டிலேயே வராது. கருத்தில் நிறைந்தவற்றை மட்டுமே பாராட்ட வேண்டும். ஒரு கவிதையைப் பாராட்டுகிறோமென்றால் கருத்து, வடிவமைப்பு, உத்தி போன்றவற்றில் கவிஞர் கையாண்டுள்ள புதுமைகளைப் பாராட்டலாம். இதுவரை வெளிவந்துள்ள கவிதைகளை விட அந்தக் கவிதை எந்த விதங்களிலெல்லாம் மாறுபட்டு நிற்கிறது என்பதைச் சொல்லிப் பாராட்டலாம்.

உழைப்பு என்பது எல்லோருக்கும் ஒரே தரமானவை என்றாலும் கடின உழைப்பு, நளின உழைப்பு என இருவகைகள் உள்ளன. கடினமாகச் செய்யவேண்டியதை நளினமாகச் செய்ய முடியாது. அதேபோல நளினமாக ஆற்ற வேண்டியதைக் கடினமாகக் கையாளவும் கூடாது. இவற்றின் திறமறிந்து பாராட்டவேண்டும். சந்தித் தெருப்பெருக்குவதற்கும் சாத்திரங்கள் உருவாக்கப்படவேண்டுமென்ற தனது பேரவாவை வெளிப்படுத்தும் மகாகவி பாரதி, அத்தொழிலையும் கற்றுத் தேர்ந்தவரே கையாளவேண்டும் என்று வலியுறுத்துகிறார். தெருப்பெருக்கும் தொழிலின் தரமுயர்த்திப் பாராட்டுகிறார். கணினித் தொழிலும் கற்கப்பட வேண்டும்; கைத்தொழில்களும் கற்கப்பட வேண்டும்; அப்போதுதான் அவ்வத் தொழில்களில் உள்ள நுட்பங்கள் வெளிப்பட்டு நல்ல பலன்களை அளிக்கும்.

நாம் செய்ய முடியாத செயல்களையும் பொருட்களையும் அடுத்தவர் செய்து முடிக்கும்போது நம்மையறியாமலேயே நாம் பாராட்டியே ஆக வேண்டும். பாராட்டு என்பது நாம் அடுத்தவர்க்குச் செலுத்துகிற நன்றியுணர்வு. நன்றியுணர்வோடு நாம் இருக்கிறோமென்றால், நமக்குப் பயன்படுகிற செயல்களை, நம்மால் செய்ய முடியாத செயல்களை அடுத்தவர் செய்யும்போது மனமுவந்து பாராட்டவேண்டும். பாராட்டுவதால் நமது எண்ணங்களில் ஒட்டியிருக்கும் பொறாமை போன்ற தீய எண்ணங்கள் கழுவப்பட்டு மனத்தில் மகிழ்ச்சி எண்ணங்கள் குடியேறுகின்றன. பாராட்டுப்பெறுபவரும் இந்தப் பாராட்டின் மூலம் தன்னுடைய அரிய பணிக்குக் கிடைத்துள்ள அங்கீகாரத்தை எண்ணி மகிழ்வார்; புதிய ஊக்கத்தை அடைவார்.

பாராட்டு மதிப்பு மிக்கது; அது மதிப்புக்குரியோரின் மதிப்புமிக்க செயல்களை, மதிக்கத் தெரிந்தவர்கள் அங்கீகரிக்கக் கையாளும் ஆனந்தமயமான உத்தி.

பாராட்டுவோம்! பாராட்டுப் பெறுவோம்!!

*நன்றி: மாலை மலர்*

## இன்றைய நாளில்...

- 1787 – பென்சில்வேனியா ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது மாநிலமாக இணைந்தது.
- 1871 – யாழ்ப்பாணத்தில் முழுமையான கதிரவ மறைப்பு அவதானிக்கப்பட்டது. இங்கிலாந்தின் வானியலாளர் நோர்மன் லொக்கியர் தலைமையில் ஓர் அறிவியலாளர் குழு இதனைப் பார்வையிடுவதற்கு யாழ்ப்பாணம் வந்தது.
- 1911 – இந்தியாவின் தலைநகரம் கொல்கத்தாவில் இருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது.
- 1923 – இத்தாலியில் போ ஆற்றின் அணைக்கட்டு உடைந்ததில் 600 பேர் உயிரிழந்தனர்.
- 1979 – கொலம்பியா, எக்குவடோர் ஆகிய நாடுகளில் 8.2 ரிச்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 300 – 600 பேர் வரையில் உயிரிழந்தனர்.
- 1985 – கனடாவின் நியூபின்லாந்தில் ஐக்கிய அமெரிக்காவின் 248 இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற டக்ளஸ் டிசி-8 விமானம் விபத்துக்குள்ளாகியதில் அமெரிக்க இராணுவத்தினர் 236 பேர் உட்பட அதில் பயணம் செய்த 256 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1997 – இலங்கையின் களுத்துறைச் சிறைச்சாலையில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் சிங்களக் கைதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.
- 2012 – வட கொரியா முதலாவது செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவியது.

## நக்கல் நமசிவாயம்

***நல்லா படிச்சவங்கள் தான் பார்லிமென்ட்டில இருக்க வேண்டுமென்று தீர்மானமொன்றை கொண்டுவந்தால் ஒரு பத்துப்பேர் தான் சபைக்குள் இருப்பாங்க பாருங்கோ...***



# இந்திய வீட்டுத்திட்டத்துக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கிவைப்பு







பொகவந்தலாவை நிருபர்,எஸ்.கணேசன்

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 519 பயனாளிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் 4000 இந்திய வீட்டுத்திட்டத்தினால் நேற்று (11) ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய புதிய கலையரங்கில் வழங்கிவைக்கப்பட்டன.

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய அதிகார சபை ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தன.

இந்தக் காணி உறுதி வழங்கும் நிகழ்வில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி, கண்டிக்கான இந்திய துணைத்தூதுவர் சரண்யா, பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் டீ.பங்கமுவ, அமைச்சின் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# தொன்கணக்கான கழிவுப்பொருட்கள் விக்டோரியா நீர்த்தேக்கத்துக்குள் ஊடுருவல்

## மகாவலி அதிகார சபை தெரிவிப்பு



எம்.ஏ.அமீனுல்லா

சட்டவிரோதமான முறையில் சுற்றுச்சூழலில் போடப்பட்டுள்ள பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் மீள்சுழற்சி செய்யமுடியாத தொன் கணக்கான கழிவுப்பொருட்கள் மழையுடன் மகாவலி ஆற்றங்கரையோரமாக உள்ள விக்டோரியா நீர்த்தேக்கத்துக்குள் குவிந்துள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கண்டி,லேவெல்ல பாலத்துக்கு அருகாமையில் இந்தக் கழிவுகள் குவிந்துள்ளதுடன், விக்டோரியா அணைக்கு பொறுப்பான பிரதம பொறியியலாளர் வசந்த எஹலபிட்டியவின் முயற்சியின் கீழ் அவற்றை அகற்றும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்பும் இதேபோன்று பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் போன்ற பிற கழிவுகள் போடப்பட்டிருந்த நிலையில், படகு மூலம் அகற்றப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கண்டி, லேவெல்ல பாலம் கட்டப்பட்ட பின்னர் அந்த இடத்திலுள்ள பழைய சங்கிலி பாலத்தின் ஒரு பகுதி தண்ணீரின் மேற்பரப்பில் விழுந்து நீர்வழிப்பாதையில் வரும் பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பிற கழிவுகள் அவற்றில் தேங்கியுள்ளதாக பிரதான அணைகள் மற்றும் மகாவலி நீர்த்தேக்கங்கள் (பணிப்பாளர்) டி. எம் தர்மதாச தெரிவித்தார்.

இந்தப் பாலத்தின் பாகங்களை அகற்றுமாறு கண்டி மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மக்காத குப்பைகளை முறைசாரா முறையில் சுற்றுச்சூழலில் அகற்றுவதன் மூலம் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதாகவும் இது தொடர்பில் மக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட அறுவர் கைது!

எஸ்.கணேசன்

காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர்வழங்கும் டிக்கோயா ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஆறுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், மாணிக்கக்கல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் – டிக்கோயா வனராஜா தேயிலைத் தொழிற்சாலைக்கு பின்புறமாகவுள்ள டிக்கோயா ஆற்றுப்பகுதியில் சிலர் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஹட்டன் பொலிஸார் சுற்றிவளைப்பு மேற்கொண்டு சந்தேக நபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இரத்தினபுரி, கஹவத்தை, பலாங்கொடை, ஹட்டன் மற்றும் டிக்கோயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25-40 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இந்நபர்கள் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.

# இலவச நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நாட்டு மக்களுக்கு பரஸ்பர புரிந்துணர்வு ஊக்குவிப்பு

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

ஜே.எம்.ஹாபீஸ்



'அமெரிக்கன் கோனர்' மத்திய நிலையங்கள் மூலம் வழங்கப்படும் இலவச நிகழ்ச்சித்திட்டங்களூடாக நாட்டு மக்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிக்க முடிந்துள்ளதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று முன்தினம் (10) தெரிவித்தார்.

கண்டியில் இயங்கும் அமெரிக்கன் கோனர் (American Corner) மத்திய நிலையத்தில் இடம்பெற்ற வைபவத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேற்படி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு 20 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு இது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இவ்வைபவத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

''செழுமையான கலாசாரம் மற்றும் கல்வி ரீதியான உறவுகளின் இரு தசாப்தங்களைக் கொண்டாடும் முகமாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம், கண்டி மாநகர சபை மற்றும் கண்டி அமெரிக்கன் கோர்னர் என்பன இணைந்து இதனைக் கண்டியில் ஏற்பாடு செய்தன. ஆங்கில மொழிப் பயிற்சி மற்றும் தொழில் முனைவுச் செயலமர்வுகள் போன்ற இலவச நிகழ்ச்சித்திட்டங்களை மேற்படி 'அமெரிக்கன் கோனர்' வழங்கியதன் மூலம் மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிக்க முடிந்தது.

கலாசாரப் பரிமாற்றம் மற்றும் கற்றல்களுக்கான மையங்களாக இந்த அமெரிக்க ஸ்தானங்கள் சேவையாற்றுகின்றன. 20 வருடங்களாக கண்டி அமெரிக்க கோனரானது, அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையில் இணைப்புப் பாலமொன்றை நிர்மாணித்து கூட்டாண்மையின் ஒரு மைல்கல்லாக இருந்து வருகிறது.

அது மட்டுமல்லாது, அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான வலுவான, நீடித்த உறவையும் நாம் இன்று கொண்டாடுகிறோம். ஆயிரக்கணக்கான இலங்கையர்களை குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் யுவதிகளை மையமாகக் கொண்டு இலவசக் கல்வி, தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் ஜனநாயகப் பண்புகள் போன்ற பல பொதுவான விழுமியங்களைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றன.

இதனூடாக அவர்களை வலுவூட்ட முடிந்தது. இலங்கை மக்களுடனான இந்தப் பயணத்தை மேலும் தொடர்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்''- என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய மாகாண பிரதிப் பிரதம செயலாளர் திலீப பியதாச உரையாற்றும்போது தெரிவித்ததாவது,

''கண்டி மாநகர சபைக்கும் அமெரிக்கத் தூதரகத்துக்குமிடையிலான நீடித்த உறவுகள் உள்ளன. எமது மாவட்டத்துக்கு இத்தகைய வளங்களை வழங்கியமைக்காக அமெரிக்கத் தூதரகத்துக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். இந்த உறவை சிறந்த முறையில் எதிர்காலத்திலும் தொடர்வதற்கு எதிர்ப்பார்க்கிறோம்''- என்றார்.

அமெரிக்கத் தூதரகத்தின் பொது அலுவல்கள் அதிகாரி ஹேர்ட்டன் பேக் உரையாற்றும்போது,

''கண்டியிலுள்ள அமெரிக்க கோர்னர் உட்பட எமது அமெரிக்க ஸ்தானங்களின் வலையமைப்பானது இலங்கை தொடர்பான அமெரிக்காவின் நீடித்த உறுதிப்பாட்டையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

இளைஞர் வலுவூட்டல் மற்றும் கல்வி வளர்ச்சிக்கான தலைமைத்துவ வாய்ப்புகளில் பல தசாப்த காலம் நாம் முதலீடுகளைச் செய்துள்ளோம். டீ.எஸ் சேனாநாயக்க ஞாபகார்த்த பொது நூலகத்தில் அமைந்துள்ள கண்டி 'அமெரிக்கன் கோனரானது', அமெரிக்காவைப் பற்றிய தகவல்கள், கலாசார செயற்பாடுகள், கல்வி ஆலோசனைகள், ஆங்கில மொழிக் கல்வி, முன்னாள் மாணவர் ஈடுபாடுகள் மற்றும் திறன் அபிவிருத்தி போன்ற விடயப்பரப்புகளில் அவதானம் செலுத்தி இலவச நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது. ஆங்கில மொழிப் பயிற்சி, இளைஞர் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் பெண்களின் தொழில் முனைவு போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இங்கு இடம்பெறுகின்றன''- என்றார்.

# தேசிய பலசரக்குப் பொருட்கள், சுவையூட்டிகள் தொடர்பான கண்காட்சி நிகழ்வு கண்டியில்





ஜே.எம்.ஹாபீஸ்

தேசிய பலசரக்குப் பொருட்கள், சுவையூட்டிகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் மத்திய மாகாணக் கைத்தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பாக நேற்று முன்தினம் (10) கண்டியில் கண்காட்சி ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தது.

கண்டி கே.சி.சி. நிலையத்தில் இடம்பெற்ற மேற்படி ஊக்குவிப்பு நிகழ்வில் பலர் பாராட்டப்பட்டனர்.

பலசரக்கு வகைகள் வெறுமனே சுவையூட்டிகளாகவோ அல்லது வாசனைத் திரவியங்களாகவோ மட்டுமல்லாது, விசேட மருத்துவக் குணங்கள் கொண்டதாகவுமுள்ளன. இதன் காரணமாகவே அவற்றின் முக்கியத்துவத்தை பிரபல்யப்படுத்தும் வகையில் இக்கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டிருந்ததாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கண்காட்சி தொடர்பான போட்டியில் பேராதனை தொழில் பயிற்சி மத்திய நிலையம் முதலாமிடத்தையும் கிரிந்த தொழிற்பயிற்சி மத்திய நிலையம் இரண்டாமிடத்தையும் கட்டுகஸ்தோட்டை தொழிற் பயிற்சி நிலையம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. அவற்றுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி: அரசாங்கம் தீர்மானம்

எம்.ஏ.அமீனுல்லா

கடந்த அரசாங்கத்தின்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் செய்தி சேகரிப்பதற்காக ஊடகவியலாளர்களை அனுமதிக்காத நிலை காணப்பட்டிருந்த போதிலும் தற்போது அந்நிலைமை மாறி, இனிவரும் காலங்களில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்புக்காகவென அங்கு சமுகமளிக்க முடியுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி, நேற்று (11) கண்டி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு செய்தி சேகரிப்பதற்கு அரசாங்க தகவல் திணைக்களத்தின் கண்டி அலுவலகத்தினால் ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளை உள்ளடக்கும் வகையில் பொது நிர்வாக அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதுடன், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலும் அது அப்படியே பேணப்பட்டது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பொதுப் பணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆளும் கட்சியின் அமைச்சர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கடுமையான கருத்து மோதல்கள் தொடர்பில் ஊடகங்கள் மூலம் வெளியிட்ட செய்திகளும் இந்தத் தடைக்கு காரணமாயிருந்தமை தெரிந்ததே.

சுமார் நான்கு வருடங்களாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

குறித்த சுற்றறிக்கை ஆவணம் இரத்துச் செய்யப்படாவிட்டாலும் சில மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் விருப்பத்துக்கிணங்க ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தில் உரிய சுற்றறிக்கையை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு குழுவின் தலைவர்களான முன்னாள் ஆளுநர் லலித் யு கமகே, பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ ஆகியோர் இதில் அக்கறை கொண்டிருந்தனர். இதன் காரணமாக மாவட்டத்தில் பொது நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை அறியும் வாய்ப்பும் பொதுமக்களுக்கு இல்லாமல் போயின.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் நேற்று (11) வன விலங்குகளினால் ஏற்படும் சேதங்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து யோசனைகள் மற்றும் ஆலோசனைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

# ஆத்திரமூட்டும் வகையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் கைது

எம்.ஏ.அமீனுல்லா

போகம்பரையிலிருந்து கண்டி தேசிய வைத்தியசாலை வளாகத்தினூடாக பேராதனை வீதிக்கு நுழைய முற்பட்டுள்ள மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் ஆத்திரமூட்டும் வகையில் செயற்பட்டமை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை காரணமாக கண்டி வைத்தியசாலை பொலிஸாரால் நேற்று முன்தினம் (10) பிற்பகல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நபர் மேலதிக விசாரணைகளுக்காக கண்டி பொலிஸ் தலைமையகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் போகம்பரையிலிருந்து பேராதனைக்கு செல்வதற்கான குறுக்குவழியாக வைத்தியசாலை வளாகத்தினூடான வீதியைப் பயன்படுத்தியதால் வைத்தியசாலை வளாகத்தில் கடும் வாகன நெரிசல் காணப்பட்டமை தெரிந்ததே.

இதன் காரணமாக சில சமயங்களில் ஆபத்தான நோயாளர்களை ஏற்றிச் செல்லும் அம்பியூலன்ஸ் வாகனங்கள் கூட வைத்தியசாலை வளாகத்துக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் நோயாளர்களின் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களை வைத்தியசாலை வளாகத்துக்குள் அனுமதிக்க வேண்டாமெனவும் பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென கண்டி தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் இரேஷா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இருப்பினும், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் வைத்தியசாலை ஊடாக பேராதனை வீதியில் நுழைய முற்பட்டதாகவும் அதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனுமதிக்காத காரணத்தினால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களைத் திட்டி அச்சுறுத்தியதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் மோட்டார் சைக்கிள் சாரதி வைத்தியசாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த வாரம் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவரும் மற்றுமொரு நபரும் வைத்தியசாலையினூடாக செல்ல அனுமதிக்கப்படவில்லையெனக் கூறி வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை தாக்கிய சம்பவமொன்றும் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கண்டி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட தெய்யன்னவெல பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் கண்டி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் நேற்று 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கண்டி பொலிஸ் தலைமையக பதில் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அப்பியாசக் கொப்பிகள் வழங்கிவைப்பு




பொகவந்தலாவை நிருபர்

அக்குறணை ரீ லைவ், அறம் செய்வோம் அபிவிருத்தி மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பொகவந்தலாவை, கொட்டியாகலை பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் 160 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் (08) பொகவந்தலாவை,கொட்டியாகலை மத்திய பிரிவு தோட்டத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொகவந்தலாவை, கொட்டியாகலை கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேல்பிரிவு டி.ஆர்.பி. பகுதியிலுள்ள தோட்டப் பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள்



வழங்கிவைக்கப்பட்டன. இதில் அக்குறணை ரீ லைவ் நிறுவனத் தலைவர் ஹாசிம் டின் மற்றும் அறம் செய்வோம் நற்பணி மன்றத் தலைவர் கிருஷ்ணகுமார், செயலாளர் சார்ள்ஸ் மற்றும் நற்பணி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் .

# முன்னாள் அத்தியட்சகர் நெவில் சில்வாவுக்கு விளக்கமறியல்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

குற்றத் தடுப்புப் பிரிவு முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வாவை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இரத்தினபுரி நீதிவான் நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் (10) தீர்ப்பு வழங்கினார்.இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரின் ஒரு கோடி 25 இலட்சம் ரூபா பெறுமதியான வேன் ஒன்றையும் பல இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்களையும் பலாத்காரமாக தன்வசம் வைத்திருந்து அதனை வேறொரு நபருக்கு வழங் கியதாக வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கிணங்க இவர் கொழும்பில் சேவை செய்து வந்த காரியாலயத்தில் கடந்த 09 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து நீதவான் இத்தீர்ப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட தேவைகளை பூர்த்திசெய்ய வரவு - செலவுத் திட்டத்தில் தீர்மானம்

## உறுதியளித்தார் நுவரெலியா மாவட்ட எம்.பி. கலைச்செல்வி

எஸ்.கணேசன்

மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை, வீட்டுரிமை கட்டாயம் பெற்றுக்கொடுக்கப்படும். இது தொடர்பில் எவ்வித சந்தேகமும் இல்லையென்று தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று (11) நடைபெற்ற 545 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,காணி உரிமை என்பது எமக்குரிய சொத்து. எனவே, கிடைக்கப்பெற்றுள்ள காணி உரிமையை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும் என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும்.

மலையக மக்களுக்குரிய வீட்டுரிமை, காணி உரிமை என்பன 200 வருடங்களாக கனவாகவே இருந்து வருகின்றன. தேசிய வருமானத்துக்கு பங்களிப்பு செய்தும் இந்நிலைமையே காணப்பட்டது. எமது மக்களின் காணி, வீட்டுப் பிரச்சினை யாவும் தீர்க்கப்பட வேண்டும். எமது ஆட்சியில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். மலையகத்தில் வாழும் சகலருக்கும் வீட்டுரிமை, காணி உரிமை என்பன பெற்றுக்கொடுக்கப்படும்.

காலை முதல் மாலைவரை வேலை செய்தாலும் சொற்ப அளவு சம்பளமே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கிறது. அதனை வைத்து அன்றாட தேவையைக்கூடப் பூர்த்திசெய்துகொள்ள முடியவில்லை. எனவே, வரவு- செலவுத் திட்டத்தில் அதற்கான தீர்மானமொன்று எட்டப்படும்" - என்றார்.

# வட மாகாணம் அபிவிருத்தியடைவதானால் உள்ளூராட்சி மன்றங்களும் மாற்றமடைய வேண்டும்

## ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு



பு.கஜிந்தன்

''வடக்கு மாகாணத்தை அபிவிருத்தியடையச் செய்வதற்கு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் எமது உள்ளூராட்சி மன்றங்களும் மாற்றமடைய வேண்டும்''- என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மாத நிகழ்வும் வாசிப்பு மாத நிகழ்வும் பண்பாட்டு பெருவிழாவும் பருத்தித்துறை எஸ்.எஸ்.மண்டபத்தில் நேற்று (11) இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

''தமிழர்களுக்கென்று தனிச் சிறப்பான பண்பாடுகள் இருக்கின்றன. அவை இன்று அருகி வருகின்றன. அவற்றை கட்டிக்காப்பதற்காகவே இவ்வாறான பண்பாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. அவை வரவேற்கப் பட வேண்டும். ஊக்குவிக்கப்பட வேண்டும். இதனூடாக எமது பண்பாடுகள் காக்கப்படுவதையும் உறுதிப்படுத்தவேண்டும். குறிப்பாக, வரவேற்பு, விருந்தோம்பல், நன்றி கூறல் என்பன எமது பண்பாட்டின் அடிப்படைகள். அவற்றை விட்டு நாம் இன்று வெகுதூரம் சென்றுவிட்டோமா என்ற அச்சம் ஏற்படுகின்றது.

அரச திணைக்களங்களை நாடி சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்கள் சென்றால், சில திணைக்களங்களில் அவர்களை வரவேற்பதற்கு யாருமில்லை. அது தவறானது. பொதுமக்களை நாடிச் சென்று நாம் சேவை செய்யவேண்டும். விரைவான, தரமான, அன்பான சேவையே மக்கள் சேவை. அதைச் செய்வதற்கு ஒவ்வொரு திணைக்களங்களும் முன்வரவேண்டும்.

எமது மாகாணத்தின் இளையோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை நாம் எமது மாகாணத்தில் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அதற்கு முதலீடுகளை இங்கு ஊக்குவிக்கவேண்டும். நான் யாழ். மாவட்டச் செயலராகப் பணியாற்றிய காலத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சிலர் வந்தார்கள். ஆனால், அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள். அவர்களிடம் கேட்டபோது, முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் கையூட்டு எதிர்பார்க்கின்றார்கள் என்று சொன்னார்கள். அது அன்றைய நிலைமை. ஆனால், தற்போதைய அரசாங்கம் அவற்றுக்கு முற்றிலும் எதிரானது.

பல முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு விரும்புகின்றார்கள். அவர்களை நாங்கள் வரவேற்கவேண்டும். எமது உள்ளூராட்சி மன்றங்கள் முதலீட்டாளர்களுக்கு உதவும் வகையில் செயற்படவேண்டும். அவர்களை அலைக்கழிக்கக் கூடாது. எமது மாகாணத்தை நாம் அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றும் இலக்கை நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும்''- என்றார். இதன்போது பிரதேச கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், வாசிப்புமாத போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. பருத்தித்துறை பிரதேச சபையின் செயலர் அ.வினோராஜ், வடக்கு மாகாண ஆளுநரை பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் நினைவுச் சின்னமும் வழங்கினார். மேலும், பருத்தித்துறை பிரதேச சபையின் நிகழ்நிலை மூலமான கட்டணங்களைச் செலுத்தும் திட்டமும் ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# கிராமிய அபிவிருத்தி – போக்குவரத்து அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பான கலந்துரையாடல்



எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான அமைச்சரவை மட்டத்திலான ஆரம்ப கலந்துரையாடல்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் ஓர் அங்கமாக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பான வரவு - செலவுத் திட்ட பரிந்துரைகள் குறித்த கலந்துரையாடல் நேற்று (11) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செயலாளர் மலர்மதி கங்காதரன், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் கபில சி. கே. பெரேரா, நிதி அமைச்சுச் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உட்பட அமைச்சுகளின் உயரதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டனர்.

# தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை; மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளில் மூன்று வினாக்கள் முன்கூட்டியே கசிந்தமையால் பரீட்சையை மீண்டும் நடத்த உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான விசாரணையை ஒத்திவைக்க உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் நேற்று (11) எஸ். துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய நீதியரசர்கள் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

3 நீதிபதிகள் கொண்ட அமர்வு முறையாக நிறைவுறாததால் மனுக்கள் மீதான விசாரணையை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது.

இந்த மூன்று மனுக்களும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மனு கடந்த தடவை அழைக்கப்பட்டபோது, முற்கூட்டியே வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் மூன்று கேள்விகளை உள்ளடக்கிய முதல் வினாத்தாளுக்கான மறு பரீட்சையை நடத்த வேண்டாமென அமைச்சரவை பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

மேலும் கசிந்ததாகக் கூறப்படும் மூன்று வினாக்களுக்கும் இலவச புள்ளிகளை வழங்குமாறு அமைச்சரவை பரிந்துரைத்துள்ளதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

# பிரித்தானிய முதன்மைச் செயலாளர் - யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சந்திப்பு



பு.கஜிந்தன்

பிரித்தானியத் தூதரகத்தின் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைக்கான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாடி நேற்று (11) காலை யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபனை சந்தித்து கலந்துரையாடினார்.

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பிரதேச மற்றும் ஆதார வைத்தியசாலை என்பவற்றில் வைத்திய உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதற்கான உதவிகளை வழங்குமாறும் அரசாங்க அதிபர் கோரிக்கை முன்வைத்தார்.

மேலும், இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் முதன்மைச் செயலாளர் வினவியபோது, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு வார காலத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் போல் எதிர்காலத்தில் ஏற்படாதவண்ணமிருக்க சீரான வடிகாலமைப்பு முறைகளின் அவசியம் பற்றி அரசாங்க அதிபர் எடுத்துரைத்தார்.


வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் இது வரை ரூபா 50 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டதெனவும் இதில் சமைத்த உணவு வழங்கல் மற்றும் உலருணவுப் பொருட்கள் விநியோகம் என்பவற்றுக்காக 49 மில்லியன் ரூபாவும் உடனடி அனர்த்த தணிப்பு வேலைகளுக்கு ஒரு மில்லியன் ரூபாவும் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற நிலைவரங்கள், அஸ்வெசும திட்டத்தில் பயனாளிகள் தெரிவு முறைமை, வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் விபரங்களை அரசாங்க அதிபரிடம் முதன்மைச் செயலாளர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, யாழ்ப்பாண மாவட்டத்துக்கான வீடமைப்புத் திட்டத்தின் தேவைப்பாடுகளையும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டதுடன் மேலும், மீள்குடியேற்ற வேலைத் திட்டங்கள் முன்னேற்றகரமாக நடைபெற்று வருவதாகவும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த காணியற்ற குடும்பங்களுக்கு காணி அரசாங்கத்தின் நிதிமூலம் கொள்வனவு செய்யப்பட்டு வீடமைப்புத் திட்டமும் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டதுடன், ஒரு நலன்புரி நிலையத்தில் மாத்திரம் இரண்டு குடும்பங்களே தங்கியிருப்பதாகவும் அவர்களுக்கும் காணிக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இம்மாத இறுதிக்குள் அந்த ஒரேயொரு நலன்புரி நிலையமும் மூடப்படவுள்ளதாகவும் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரித்தானிய தூதரகத்தின் அலுவலகர் செல்வி ப்ராக் வோர்தூஸும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் மு.பொ. நினைவுப்பகிர்வு



கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு மூத்த எழுத்தாளர், கவிஞர் அமரர் மு. பொன்னம்பலம் (மு.பொ) நினைவுப்பகிர்வு இடம்பெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நினைவுப்பகிர்வில் முனைவர் செல்வி திருச்சந்திரன்,பேராசிரியர் சி.மௌனகுரு,பேராசிரியர் வ.மகேஸ்வரன், உரை பெயர்ப்பாளர் எஸ்.சிவகுருநாதன், சட்டத்தரணி நடராஜா் காண்டீபன்,மெய்யியல் ஆசான் தா.இராஜரட்னம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.







சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வும் மனித உரிமைகள் அமைப்பு லங்காவின் பதினேழாவது ஆண்டு பூர்த்தி நிகழ்வும் கொழும்பு - 07, இலங்கை மன்றக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்னாயக்க மற்றும் டாக்டர் இசுரு பண்டார உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.










சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை திருக்கோவில் பகுதியில் நடத்தியது. குறித்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

படங்கள்: பாறுக் ஷிஹான்

# மரியானா அகழி: மர்மக் கடல் பகுதி




மனிதர்கள் விண்வெளியில் ஏனைய கோள்கள் பற்றிய ஆய்வுகளையும் வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய ஆய்வுகளையும் செய்து வருகின்றனர். ஆனால், தொழில்நுட்ப வளர்ச்சிக் காலத்திலும் கூட மனிதர்களால் கால் பதித்து ஆராய்ச்சி செய்ய முடியாத மர்மங்கள் புதைந்த இடமாக மரியானா அகழி உள்ளது. இதுவே உலகின் மிக ஆழமான பகுதியாகவும் காணப்படுகின்றது.


பசுபிக் கடல் பகுதியில் இரண்டு நிலத்தகடுகளின் மோதலினால் உருவாக்கப்பட்ட படுகுழியாக மரியானா அகழி உள்ளது. ஹவாய் மற்றும் பிலிப்பைன்ஸுக்கிடையே குவாம் என்ற தீவுக்கருகில் நீரின் மேற்பரப்புக்கு மிகக் கீழே மரியானா அகழி அமைந்துள்ளது. மரியானா தீவுக்கு அருகாமையில் இது காணப்படுவதால் இவ்வகழிக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதுவரை மனிதரால் கண்டுபிடிக்க முடியாத பல மர்மங்களைக் கொண்ட இடமாக மரியானா அகழி உள்ளது எனலாம். பூமியினுடைய ஆழ்கடல் பகுதியில் மனிதன் ஆய்வு செய்யாததற்கு முக்கிய காரணமாக அதன் அழுத்தம் உள்ளது. உள்ளே செல்லச் செல்ல ஆயிரம் மடங்காக அதன் அழுத்தம் அதிகரித்துக் கொண்டே செல்லும் தன்மை ஆழ்கடலில் உள்ளது. அதாவது, 15,750 Psi அழுத்தம் கொண்டு அமையும். அதுபோலவே ஆழ்கடலில் ஆழத்துக்குச் செல்லச் செல்ல சூரியனின் வெளிச்சமும் குறைவடைந்து கொண்டே செல்லும். இதனால் 200 மீற்றர் ஆழத்தை அடுத்து வரும் 1000 மீற்றர் ஆழத்தில் வெளிச்சம் மிக அரிதாகவே கிடைக்கப்படும்.

இங்கு வாழும் கருநீல உடலமைப்பைக் கொண்ட சில பயோ லுமினஸ் மீன்களின் உடம்பிலிருந்து வரும் ஒளியே ஆழ்கடலில் கிடைக்கும் வெளிச்சமாக அமைகிறது. இதற்கெனவே அதன் சருமத்தில் நிறமி மெலனின் அசாதாரணமாக உள்ளது. இதனாலே மீன்கள் தமக்குமேல் படும் ஒளியை உறிஞ்சி அல்ட்ரா பிளாக் நிறமாக காட்சியளிப்பதுடன் இம்முறையைப் பயன்படுத்தி ஆய்வாளர்கள் நவீன தொழில்நுட்பத்தில் மெல்லிய அல்ட்ரா பிளாக் தொழில்நுட்ப தயாரிப்பை மேற்கொள்கின்றனர். இங்கு உவர்நீர் காணப்படுவதுடன் ஜியோ தெர்மல் காரணமாக வெப்பநிலையுடைய தன்மையாலும் இவை உரையாது காணப்படுகின்றன.

ஆழ்கடலில் சுமார் 450°C வெப்பநிலையைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இப்பகுதிகளில் ஏற்படும் அடர் அழுத்தம் காரணமாக நீரின் தன்மை மாற்றமடைந்து பிளாக் ஸ்மோக்கர்சை உருவாக்கும். அது ஒருவகையான புரோட்டின் புரதத்தை உருவாக்கி அங்குள்ள உயிரினங்களுக்கு இரையாகின்றன. அதிகமான அமிலத்தன்மையை இங்குள்ள ஆழ்கடல் நீர் உண்டாக்கினாலும் உயிரினங்கள் அதனை தமக்கு நேர்தன்மையானதாக மாற்றி அதற்கு இசைவாக்கப்படுத்தப்பட்டு உயிர் வாழ்கின்ற தன்மை காணப்படுகின்றது.

இத்தகைய பாதகமான சூழலில் உயிரினங்கள் வாழ்கின்றனவா என்றால், ஆம்.. பாரிய இராட்சத மீன்கள், வைரஸ்கள், பலவகை அக்டோபஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் சில பண்டைய கால மீன்கள் வாழக்கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் பெரிய சுறா வகைகளைச் சேர்ந்த கோப்லின் ஷார்க் (Goblin shark), ஆங்கிலர் பிஸ்(Angler fish), பிரில்லிட் ஷார்க்(frilled shark), டிராகனின் வடிவமைப்பை போன்றதான டீப் சி டிராகன் பிஸ்(Deep Sea Dragon fish), மேலும் ஜினோபையோபோர்ஸ்(Xenophyophors) என்ற அளவில் மிகப் பெரிய அமீபா வகையைச் சேர்ந்த உலகின் பெரிய செல் உயிரி, இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் சீ லாம்பர்(Sea Lampre), எம்பிபொட்ஸ்(Amphipods) என்ற உயிரினம் (இதிலிருந்து வெளிவரும் திரவத்தின் மூலம் பிளாஸ்ரிக், போதைப்பொருள், சில அழகு சாதனப் பொருட்கள் செய்யப்படும்). அளவில் பெரிய தம்போ அக்டோபஸ்(Dumbo Octopus), சி குகும்பர் (Sea Cucumber), கியான் டியூப் வார்ம்ஸ் (Giant tube Worms), ஷ்பூன் வாம்ஸ் (Spoon Worms), சோம்பி வாம்ஸ் (Zombee worms) போன்ற விநோதமான உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மெகலோடன்(Megalodan) என்ற இராட்சத சுறா மீன் இப்பகுதியில் வாழலாம் என அங்கு கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் மூலம் ஆராய்ச்சியாளர்கள் ஊகிக்கின்றனர்.



இவை தவிர, 4,000த்துக்கும் மேற்பட்ட உயிரினங்கள் அங்கு இருக்கக்கூடுமென இவர்கள் ஆழ்கடலைச் சென்று பார்வையிட்டபோது கூறியுள்ளனர். இத்தகைய ஆழம் புதைந்த பகுதி இன்னும் ஓர் உலகமாக உள்ளதெனவும் அங்குள்ள வித்தியாசமான ஒலிகள் கேட்கவே பயங்கரமாக அமைகிறதெனவும் இது ஆயிரம் தொடக்கம் 4,000 கிலோமீற்றரையும் தாண்டியும் கேட்கக் கூடியதாகவுள்ளதென ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

மரியானா அகழி பசுபிக் கடலின் மிக ஆழமான பகுதியாக அமைவதுடன் இதன் ஆழம் 11 கிலோமீற்றர் எனவும் 250 கிலோ மீற்றர் நீளமும் 69 கிலோமீற்றர் அகலமும் கொண்ட பாரிய அகழியாக உள்ளது. உலகின் உயரமான மலையான எவரெஸ்ட் மலையை இதில் மூழ்கடித்தாலும் இரண்டு அல்லது மூன்று கிலோமீற்றர் ஆழம் மேலதிகமாக கடல் நீர் பதியப்படும் அளவுக்கு ஆழமானதென அறிய முடிகிறது.

மரியானா அகழி 1976இல் இங்கிலாந்தைச் சேர்ந்த HMS சேலஞ்சர் என்ற கப்பல் மூலம் கடல் சார் ஆய்வு பயணத்தில் ஈடுபட்டு கடலின் ஆழத்தைக் கணிக்கச் சென்ற கப்பலின் மூலம் அறிய முடிகின்றது. இந்த நிலையில், இதன் ஆழம் எட்டு கிலோ மீற்றராக மாத்திரமே காணப்பட்டது. இதன்பின் உலகில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அவ்வாழத்தை ஆராய்ச்சியாளர்கள் மீண்டும் சென்று பார்வையிட முடியாத நிலை காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து 75 வருடம் கழித்து 1951இல் HMS சேலஞ்சர் 2 இன்று பிரிட்டிஷ் கப்பல் மீண்டும் அவ்விட ஆழத்துக்குச் சென்று அதனைச் சுற்றிய இடங்களிலும் ஆய்வை மேற்கொண்டனர். அதன்போது அவர்கள் கிட்டத்தட்ட 11 கிலோ மீற்றர் ஆழத்தையும் கண்டுகொண்டனர். இருப்பினும் கூட முதன் முதலில் மரியானா அகழியின் அடி ஆழத்துக்கு சென்றவர்களாக ஜக்குவஸ் பிக்கார்ட் (Jacques Piccard) என்ற விஞ்ஞானியும் அமெரிக்க நேவிப்படையைச் சேர்ந்த டான் வால்ஸ்(Don Walsh) என்போரும் உள்ளனர். 1960 இல் இவர்கள் டீன் ஸ்டிவ் (Tenestive) என்ற சப்மெரின் மூலம் உள்ளே



சென்றுள்ளனர். 32 ஆயிரம் அடியைத் தாண்டும்போது இவர்களது சப்மெரின் ஆழ்கடலின் அழுத்தத்தினால் சில சேதத்துக்கு உள்ளாகியதுடன் பின் ஆபத்து ஏதும் இல்லை எனத் தெரிந்ததும் 20 தொடக்கம் 25 நிமிடத்துக்கு பிறகு இவர்கள் இருவருமே கரைக்குச் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து சுமார் பத்து வருட ஆயத்தப்படுத்தலுக்குப் பின் திரைப்பட தயாரிப்பாளரும் அறிவியல் புனைக்கதை ஆய்வாளருமான ஜேம்ஸ் கேமரூன் Jems (Camaron) 2012 தீப் சி சேலஞ்சர்(Deep Sea Chellenger)என்ற பெயரில் 24 அடி உயரமும் 3 1/2 அடி அகலமும் 11.8 தொன் அளவு எடையுடைய சப்மெரிசபல் ஒன்றைத் தயாரித்து பயணித்தார்.

இவருடன் ரோலக்ஸ், நேஷனல் ஜியோகிராபிக் சொசைட்டி இரன் அலோன் என்ற அவுஸ்திரேலியா இன்ஜினியர் என பலரும் இதில் கைகோர்க்கின்றனர். இந்த சப்மெரிசபல் ஒரு நிமிடத்துக்கு 150 மீற்றர் வேகம் பயணிக்கக்கூடியதாகக் காணப்பட்டது. இவரது வெற்றிகரமான பயணத்தின் பின்னர் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் சில ஆழ்கடல் சாகச பயணங்களில் ஈடுபடுபவர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் பயணங்களை மேற்கொண்டனர்.

அதாவது, 2019 விக்டர் வெஸ்கோவா



(Victor Vescouva) இரண்டு முறை பயணித்துள்ளார். பின்னர் 2020ஆம் ஆண்டு கேத்தலின் சட்லிவென் (Kathryn Sullivan) மற்றும் வெநிச ஓ பிரியான் (Vnessa O'Brien) என்ற இரண்டு பெண்கள் முதன்முதலாக மரியானா அகழிக்குச் சென்றனர். இவ்வாறு மரியானா அகழியின் ஆழத்துக்குச் சென்று வந்த நபர்களை விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். அதற்கு காரணம், அங்கு நிறைந்துள்ள மர்மமான விடயங்கள் ஆகும். இப்படி ஏராளமான இரகசியங்களையும் மர்மங்களையும் உள்ளடக்கிய மரியானா அகழியின் அடிப்பகுதியில் மேலும் என்னவெல்லாம் இருக்கின்றது எனவும் அவ்வாறான உண்மைகள் எப்போது வெளி உலகத்துக்கு கிடைக்கப்பெறுமெனவும் ஆய்வாளர்கள் ஆராய்ச்சியை நடத்தினாலும் கூட காலம் மட்டுமே பதில் கூற முடியும்.

**இரா.தினேஷா நிஷாமலி,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**02ஆம் ஆண்டு மாணவி,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**

## கிழக்கு மாகாண ஆளுநர் - ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்துக்கான பிரதிநிதி சந்திப்பு



**(சீனக்குடா செய்தியாளர்)**

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்துக்கான (UNFPA) பிரதிநிதி குன்லே அதேனிக்குமிடையிலான சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை(10) இடம்பெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாணத்திலுள்ள சமூகங்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகளுக்கு ஆதரவளிக்க பல்வேறு பங்குதாரர்களுடன் UNFPA இன் தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அதேனி உறுதியளித்தார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஆரோக்கியம், பாலின சமத்துவம் மற்றும் காலநிலை மீள்தன்மை போன்ற முக்கிய துறைகளில் கவனம் செலுத்துவதை அவர் முன்னிலைப்படுத்தியதோடு, இந்த முயற்சிகளில் ஆளுநரின் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், கிழக்கு மாகாணத்தின் பல்கலாசாரத் தன்மையை அங்கீகரித்து, அதன் பன்முகத்தன்மையை பலமாகப் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், மாகாணத்தில் சமூக மற்றும் இன நல்லிணக்கத்தையும் பாலின சமத்துவத்தையும் மேம்படுத்துவதே தனது முதன்மையான கவனமென்று கூறிய ஆளுநர், குடும்ப வன்முறைகள் அதிகமாக இருப்பதையும் சுட்டிக்காட்டி, பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

## தென்கிழக்கு பல்கலையில் 13ஆவது சர்வதேச ஆய்வரங்கு



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடம் ஏற்பாடு செய்த 'நவீன சாதாரண நிலைக்கு உருமாறுதல்: மேலாண்மை மற்றும் வர்த்தகத்தில் புதுமை, ஒருங்கிணைப்பு, மற்றும் நிலைத்தன்மை'எனும் தொனிப்பொருளில் 13ஆவது சர்வதேச ஆய்வரங்கு (AIRC 2024) பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(10) நடைபெற்றது.

ஆய்வரங்கின் தலைவர், முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி, பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா தலைமையில் ஆய்வரங்கின் இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சீனா உம்மா கபூரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத், கௌரவ அதிதியாக பேராசிரியர் கலாநிதி பி.கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாய்வரங்குக்கு பிரதான பேச்சாளராக பேராசிரியர் கலாநிதி சந்தன அலவத்தகே நிகழ்நிலையூடாகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

நிகழ்வின்போது முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி சபீனா எம்.ஜி.எச். கௌரவிக்கப்பட்டதுடன் AIRC FMC SUSL ஆய்வரங்குக்கு 98 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதில் 80 கட்டுரைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டன.

இந்நிகழ்வின் நன்றியுரையை AIRC 2024 செயலாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.சிராஜி ஆற்றிய அதேவேளை, நிகழ்வின் முடிவுரையை பேராசிரியர் கலாநிதி என்.கங்காதரன் நிகழ்த்தினார். ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் ஞாபக சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



***கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட மாவடிப்பள்ளி அல்- அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு புதிய தலைமுறை கழகத்தினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதிபர் ஏ.எல்.ரஜாப்தீன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பின் ஆலோசனைக்கிணங்க, புதிய தலைமுறை கழகத்தின் மாவடிப்பள்ளி செயற்பாட்டாளர்களினால் ஒரு தொகுதி உபகரணங்கள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மாளிகைக்காடு செய்தியாளர்)***



**சர்வதேச மனித உரிமை தினத்தை சிறப்பிக்குமுகமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் மனித உரிமை தின நிகழ்வு செவ்வாய்க்கிழமை(10) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாசில் கலந்துகொண்டார். அத்துடன், ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் அறிக்கைகள் பிரதம அதிதி, பிரதேச செயலாளர் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன. (பாறுக் ஷிஹான்)**



**அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் பிரதேச நோயாளர்களின் அவசிய தேவைகளைக் கருத்திற்கொண்டு பாலமுனையைச் சேர்ந்த வை.எல்.ஹாஜறாவினால் ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஐ.எம்.ஜவாஹிரிடம் திங்கட்கிழமை(09) கையளிக்கப்பட்டது. இதன்போது, பொதுச் சுகாதாரப் பிரிவு பொறுப்பு வைத்தியர் எவ்.எம்.ஏ.காதர், வைத்தியசாலை நலன்புரிச் சங்கச் செயலாளரும் தாதிய உத்தியோகத்தருமான எஸ்.யோகராஜா, நிர்வாக உத்தியோகத்தர் கே.விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)**

# சாய்ந்தமருது பிரதேச உணவகங்களில் திடீர் பரிசோதனை பாவனைக்குதவாத உணவுகள் கைப்பற்றப்பட்டு அழிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையிலான குழுவினரால் சாய்ந்தமருது பிரதேச உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது உணவகங்கள், வெதுப்பகங்கள், மரக்கறி, மீன் விற்பனை நிலையங்கள், பலசரக்கு கடைகள், ஸ்வீட்ஸ் கடைகள் என்பன சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது பழுதடைந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் சில வர்த்தக நிலையங்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்வரும் காலங்களில் உணவு, சுகாதாரம் மீதான எமது கண்காணிப்பு தொடரும் என்பதுடன் இறுக்கமான சட்ட நடைவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சாய்ந்தமருது பிரதேசங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது

கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினையடுத்து, மாறுவேடத்தில் சென்ற கல்முனை விசேட அதிரடிப்படையினர் துறைநீலாவணை பகுதியில் வைத்து குறித்த இருவரையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், ஒரு தொகை கேரள கஞ்சா, கைத்தொலைபேசி, மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களுடன் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

43 மற்றும் 39 வயதுடைய இரு சந்தேக நபர்களும் மத்தியமுகாம், கிளிநொச்சி பகுதியை சேர்ந்தவர்களாவர். குறித்த கேரளா கஞ்சா கிளிநொச்சி பகுதியில் இருந்து பஸ் ஊடாக கடத்தப்பட்டு பின்னர் மோட்டார் சைக்கிள் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயலணிக் கூட்டம்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் அம்பாறை மாவட்ட பெண்கள் அமைப்பின் அனுசரணையில் பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டமும் பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயலணிக் கூட்டமும் காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ.அருணன் தலைமையில் இடம் பெற்றது.

காரைதீவு பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.நித்யாவின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இக் கூட்டத்தில் துறைசார் உத்தியோகத்தர்களினால் சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் எதிர்கொள்கின்ற சவால்கள் பற்றி ஆராயப்பட்டன.

இதன்போது அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பாகவும் அதற்கு முன்னாயத்தம் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் மாணவர்கள் இடைவிலகல் மற்றும் தற்கொலை, அதற்கான காரணங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

அத்தோடு, பாடசாலைகளை அண்டிய பகுதிகளில் போடப்படுகின்ற கழிவுகளும் அதனைத் தடுக்கும் வழிமுறைகள் மற்றும் பல விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. இந்தக் கூட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பிரதிநிதிகள், பொலிஸ் திணைக்களப் பிரதிநிதிகள், வலயக் கல்வி அலுவலகப் பிரதிநிதிகள், பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடியில் அனர்த்த முகாமைத்துவ ஒன்றுகூடல்





(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி மற்றும் அண்மித்த பகுதிகளில் அனர்த்த நிலைமைகளின் போது களப்பணியாற்றும் சமூக நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை ஒன்றிணைக்கும் நோக்கில் அனர்த்த முகாமைத்துவ ஒன்றுகூடல் செவ்வாய்க்கிழமை (10) ஜூமைரா பீச் பெலஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

சம்மேளனத்தின் தலைவர் பொறியியலாளர் ஏ.எம்.எம்.தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின்போது களத்தில் நின்று சமூகப்பணியாற்றிய அமைப்புகளை ஒருங்கிணைத்து எதிர்காலத்தில் அனர்த்தங்கள் ஏற்படும்போது சிறந்த முறையில் முகாமைத்துவம் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மேளனத்தின் நிர்வாக உறுப்பினர்கள், உலமாக்கள், சமூக அமைப்புகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட செயலக கணக்காய்வு முகாமைத்துவ கூட்டம்



(சீனக்குடா செய்தியாளர்)

2024ஆம் ஆண்டுக்கான நான்காம் காலாண்டுக்கான திருகோணமலை மாவட்ட செயலக கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி (கிழக்கு மாகாணம்) டபிள்யூ.சி.வி.குருப்பு, பிரதம உள்ளக கணக்காய்வாளர் பா.கேதீஸ்வரன், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், கணக்காளர் ஏ.எல்.பிரசாத் விஜேசிங்க, பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் உரிமைப் பிரச்சினைகளை வலியுறுத்தி

# ‘சமஷ்டியே தீர்வு’ என எழுதப்பட்ட பட்டி அணிந்து திருகோணமலையில் கவனயீர்ப்புப் போராட்டம்




(சீனக்குடா செய்தியாளர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் திருகோணமலையில் நேற்று புதன்கிழமை(11) மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

AHRC நிறுவனத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாண பிரதேச சிவில் வலையமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கவனயீர்ப்பு போராட்டமானது வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் எதிர்நோக்கும் உரிமை ரீதியான பிரச்சினைகளை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்டதாக அதன் இணைப்பாளர் கண்டுமணி லவகுகராசா தெரிவித்தார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த மூவின மக்கள், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள், துறைசார் சிவில் அமைப்புகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், விவசாயிகள், நிலத்தை இழந்தவர்கள், மத வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டவர்கள், மீனவர்கள், பெண்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அடங்கலாக பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ‘‘சமஷ்டியே தீர்வு என எழுதப்பட்ட சுலோகங்களை தங்களது தலையில் அணிந்தவாறு வடக்கு, கிழக்கில் இடம்பெறும் காணி சுவீகரிப்பை நிறுத்துங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துங்கள், மீள நிகழாமையை உறுதிப்படுத்து, கூட்டுப்படுகொலைகளுக்கான நீதி வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, அரசியல் கைதிகளை விடுதலை செய், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு வழங்கு, மீனவர்களுக்கான நிவாரணம் வழங்கு, பன்முகப்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் பெண்களுக்கான தீர்வை வழங்கு, 76 வருட தேசிய இனப்பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வு வேண்டும்’’ போன்ற கோஷங்களை எழுப்பியவாறு திருகோணமலை சிவன் கோவிலுக்கு முன்னிருந்து ஆரம்பமான பேரணியானது திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தைச் சென்றடைந்தது.

பின்னர், கிழக்கு மாகாணத்திலுள்ள மேற்கூறிய பாதிப்புகளைக் கொண்ட மக்கள் தங்களுக்கான பிரச்சினைகளை முன்வைக்கும் மண்டப நிகழ்வு சிவில் வலையமைப்பின் தலைவர் ரெஜினோல்ட் சுதர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திருமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ராஜசேகரர், கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மதிவண்ணன், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் யு.த.இசைதீன், திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் AHRC இன் நிறைவேற்று சபையின் செயலாளருமான சட்டத்தரணி த.பிரசாந்தினி மயூரன், AHRC இணைப்பாளர் கண்டுமணி லவகுகராசா, பிரதி இணைப்பாளர் அழகுராசன் மதன் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த மண்டப நிகழ்வில் மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மற்றும் தற்போதும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்களால் உரிய அதிகாரிகளுக்கு, தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் எதிர்பார்க்கும் தீர்வு குறித்தும் மகஜர் ஒன்றும் பெண் மனித உரிமை பாதுகாவலர் நாகேஸ்வரனால் வாசிக்கப்பட்டு உரிய அதிகாரிகளூடாக ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

# திருமலையில் தொழிற்சந்தை ஆட்தேர்வு





(தம்பலகாமம் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட செயலக தொழில் நிலையத்தின் ஏற்பாட்டில் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் அனுசரணையுடன் 2024ஆம் ஆண்டுக்கான தொழிற்சந்தைக்கான ஆட்தேர்வு செவ்வாய்க் கிழமை (10) மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி கலந்துகொண்ட இந்நிகழ்வில் தொழில் வழங்குனர்களாக தனியார் நிறுவனமும் உள்ளூர் ஆடைத்தொழிற்சாலைகள் மற்றும் பல தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய, துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# அருணலு கடன் வேலைத்திட்டம் தொடர்பான தெளிவூட்டல்





(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பில் சமுர்த்தி அருணலு கடன் வேலைத்திட்டம் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஜே.எவ். மனோகிதராஜ் தலைமையில் பழைய மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்றது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளை வலுப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நுகர்வுத் தேவைகளைப் பலப்படுத்தும் செயற்றிட்டமாக இத் திட்டம் காணப்படுகின்றது.

இதன்போது வளவாளராக சமுதாய அமைப்பு மாவட்ட முகாமையாளர் பகிரதன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர்கள், தலைமையக முகாமையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டம்





(திராய்க்கேணி செய்தியாளர்)

அட்டாளைச்சேனை பிரதேச அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டம் பிரதேச செயலாளர் பி.டி.எம். இர்பானின் ஒருங்கிணைப்பில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அபூபக்கர் ஆதம்பாவா, எம்.எஸ். உதுமாலெப்பை ஆகியோரின் இணைத் தலைமையில் அட்டாளைச் சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல்.அனீஸ், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட், துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கடந்த வாரங்களில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான பிரச்சினைகள் முன்வைக்கப் பட்டதுடன் அவ்விடயங்கள் தொடர்பாக (விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, வீதி, கால்நடை, வடிகான், கல்வி, சுகாதாரம், மின்சாரம், பாதுகாப்பு) துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளினால் தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

# இஸ்லாமாபாத் சுனாமி வீட்டுத் தொகுதி கழிவுநீர் பிரச்சினை குறித்து ஆராய்வு

## ஆதம்பாவா எம்.பி. தலைமையிலான கள விஜயத்தில் நடவடிக்கை எடுக்கவும் தீர்மானம்



(சாய்ந்தமருது செய்தியாளர்)

கல்முனை, இஸ்லாமாபாத் சுனாமி வீட்டுத் தொகுதியில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற கழிவுநீர் பிரச்சினை குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா மற்றும் கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் உள்ளிட்ட அதிகாரிகள் திங்கட்கிழமை (09) மாலை அங்கு கள விஜயம் மேற்கொண்டனர்.

இஸ்லாமாபாத் வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் பொதுமக்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் பொருட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா, கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்து மாநகர ஆணையாளருடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடியதையடுத்தே அதிகாரிகள் சகிதம் ஸ்தலத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

கல்முனை மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி, கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், உள்ளூராட்சி உத்தியோகத்தர் எம்.சர்ஜூன், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம்.நஹீம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.நுஸைர் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த பிரச்சினைக்கு விரைவாக நிரந்தரத் தீர்வு காண்பதற்கான மூலோபாயத் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டதுடன் சாத்தியமான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் காரணமாக கல்முனையில் வீடு வாசல்களை இழந்த மக்களுக்காக இஸ்லாமாபாத் பகுதியில் அமைக்கப்பட்ட வீட்டுத் தொகுதியில் 194 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவ்வீடுகளுக்கான மலசலகூடக் கழிவுகளும் குளியலறை மற்றும் சமையலறை கழிவுநீர்களும் ஒட்டுமொத்தமாக ஒரே கழிவுக் குழியில் செலுத்தப்படுவதால் அக்குழியில் பாரிய அழுத்தங்களும் வெடிப்புகளும் ஏற்பட்டு கழிவு நீர் வெளியேறுவதால் அங்கு வசிக்கும் மக்கள் நீண்ட காலமாக சுகாதாரச் சீர்கேடு மற்றும் துர்நாற்றத்துக்கு முகம்கொடுத்துக்கொண்டு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வீட்டுத் தொகுதிகள் அமைக்கப்படும்போது மலசலகூட மற்றும் கழிவுநீர் அகற்றலுக்கு முறையான திட்டமிடலுடன் கழிவுக் குழிகள் அமைக்கப்படாமையே பிரதான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவையும் வெற்றியளிக்கவில்லையெனவும் கூறப்படுகிறது.

# ஜனாதிபதி அநுர தலைமையில் அமைச்சுகளின் செலவுத் தலைப்பு தொடர்பில் கலந்துரையாடல்







2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான அமைச்சரவை மட்டத்திலான ஆரம்ப கலந்துரையாடல்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் ஓர் அங்கமாக விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சுகளின் செலவு தலைப்புக்கு அமைவான வரவு - செலவுத் திட்ட பரிந்துரைகள் குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் (10) முற்பகல் ஜனாதிபதி செயலகத் தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டீ.பி.விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சுகளின் உயரதிகாரிகள், சிரேஷ்ட அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.





**இலங்கை மற்றும் ஈராக் குடியரசுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பில் அமைந்துள்ள ஈராக் தூதரகத்தினால் நேற்று முன்தினம் (10) கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். ஈராக் குடியரசால் நியமிக்கப்பட்டுள்ள தூதுவரின் (Anmar A. A. Al-Emin) அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர்.**

# இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்







2024 ஆம் ஆண்டுக்கான இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இரத்தினபுரி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் மற்றும் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்டப் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சாந்த பத்மகுமார ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிது சுனில் செனவி, பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் உட்பட இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச மற்றும் அரை அரச நிறுவனங்கள் சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டதோடு கடந்த கால அபிவிருத்தித் திட்டங்கள், எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன. இதேவேளை பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இரத்தினபுரியிலுள்ள தோட்டப்புற பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்,பௌதீக,ஆளணிப் பற்றாக்குறை சம்பந்தமாகவும் தோட்டப்புறங்களில் தலைவிரித்தாடும் சட்டவிரோதமான மதுபானங்களை தடைசெய்தல், அவற்றை முழுமையாக இல்லாது ஒழித்தல் போன்ற விடயங்கள் குறித்தும் கூட்டத்தில் கருத்துகளையும் முன் வைத்திருந்தார். இறக்குவானை, மாதம்பை, இல 2 பாடசாலை உயர்தரம் சார்ந்த சாதகமான முடிவு எடுக்கப்பட்டது. மாவட்டத் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான சாந்த பத்தமகுமார கருத்து தெரிவிக்கையில்,

இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

# பூநகரி அரசபுரம் மக்கள் எதிர்நோக்கும் குடிநீர்த்தட்டுப்பாடு

## நேரில் சென்று விசாரித்தார் சிறீதரன் எம்.பி.





பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் பள்ளிக்குடா, அரசபுரம் கிராம மக்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்குமிடையிலான மக்கள் குறைகேள் சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை (09) அரசபுரம் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

அப்பிரதேச நீரின் உவர்த்தன்மை காரணமாக குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் அப்பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த பொதுக் கிணற்றைச் சூழவுள்ள குளப் பகுதியை கையகப்படுத்தியுள்ள இராணுவத்தினர், தினமும் பி.ப. 4-6 மணிவரை ஒரு குடும்பத்துக்கு 20-40லீற்றர் என்ற மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே குடிநீரை விநியோகித்து வருவதால் தமது தேவைக்கேற்ப நிறைவான குடிநீரைப் பெறுவதற்கான வழியை ஏற்படுத்தித் தருமாறும் வீதிப் புனரமைப்பு மற்றும் பொதுப் போக்குவரத்துக்கான பஸ்சேவை உள்ளிட்ட தேவைப்பாடுகளை நிவர்த்திசெய்து தருமாறும் குறித்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை, அரசபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஆறு, பொதுமக்களுக்குச் சொந்தமான 12 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளதுடன், அக்காணிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறும் சமநேரத்தில், ஒரேநாளில் 34 டிப்பர் மணல் இராணுவத்தினரால் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அரசபுரம் மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அப்பிரதேச மக்களின் கோரிக்கைக்கமை வாக குடிநீர் விநியோக சீராக்கம், வீதிப் புனரமைப்பு, பஸ் சேவையை ஏற்படுத்தல் மற்றும் காணி அபகரிப்புக்கு எதிரான நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அப்பகுதி மக்களிடம் உறுதியளித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன்,அரசபுரம் கிராமத்தின் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# சிறார்களின் ஆபாச படங்களை இணையத்தில் வெளியிடுகின்றமை தொடர்பில் விசாரணை

இலங்கை சிறார்களின் ஆபாசமான காணொளிகள் மற்றும் புகைப்படங்களை இணையத்தில் சிலர் வெளியிடுவதாக அமெரிக்க நிறுவனமான 'நெக்மேக்' வெளியிட்ட தகவல் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி நீதிமன்றத்துக்கு சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் முன்வைத்த சமர்ப்பணங்களைக் கருத்திற்கொண்டு கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட 'நெக்மேக்' என்ற இந்த இணையதள நிறுவனம் உலகின் எட்டு நாடுகளுடன் இணைந்துள்ளதாக நீதிமன்றத்தின் முன் பணியகம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் உறுப்புரிமை பெற்ற நாடுகளில் சிறுவர்கள் தொடர்பான ஆபாசமான காணொளிகள் மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் வெளியிடப்படுவது குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேடுதலின்போது, இலங்கைச் சிறுவர்களின் ஆபாசமான காணொளிகள் மற்றும் புகைப்படங்கள் கணினி சாதனத்தினூடாக வெளியிடப்பட்டிருப்பதை அந்த நிறுவனத்தின் நெக்மேக் செயலி ஊடாகக் கண்டறிந்து அது குறித்து இலங்கைக்கு அறிவித்ததாக பணியகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இச்சம்பவம் போன்ற பல முறைப்பாடுகள் தற்போது வரை கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்ந்தும் கிடைக்கப்பெறுவதாகப் பணியகம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

பல முறைப்பாடுகள் கிடைத்து வருகின்ற போதிலும், இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எவரும் இதுவரை கண்டறியப்படவில்லையென பணியகம் நீதிமன்றில் முன்வைத்த சமர்ப்பணங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் ஆபாசமான காணொளிகள் மற்றும் புகைப்படங்களை சிலர் தமது கையடக்கத் தொலைபேசியில் தரவிறக்கம் செய்து சமூக ஊடகங்கள் ஊடாக அந்த ஆபாச காணொளிகள் மற்றும் புகைப்படங்களை பரப்பி வருவதாக தகவல் கிடைத்துள்ளதாகப் பணியகம் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்துள்ளது.

பொலிஸ், சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் நீதிமன்றில் முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதவான், சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, டெலிகிராம் செயலியில் ஆபாசமான காணொளிகளைப் பயன்படுத்தி பாடசாலை மாணவர்களைப் பயமுறுத்தி கப்பம் கோரும் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளதாக கணினி அவசர பதிலளிப்பு மன்றம் தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான மேலதிக வகுப்பு மாணவர்களைக் கொண்ட டெலிகிராம் குழுக்கள் இதற்காகப் பயன்படுத்தப்படுவதாக அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் விளக்கமளிக்கும் சாருக தமுனுபொல, "தற்போது டெலிகிராம் செயலி ஊடாக பிள்ளைகளைக் குறிவைத்து ஆபாசமான காட்சிகளைப் பயன்படுத்தி மிரட்டல் விடுத்து பணம் பறித்தல் போன்ற சம்பவங்கள் நடக்கின்றன.

இங்கே, பெரும்பாலும் மேலதிக வகுப்புக்காகத் தயாரிக்கப்பட்ட டெலிகிராம் குழுக்கள் மூலமே உங்கள் பிள்ளைகளுக்கு இதுபோன்ற ஆபாசமான காட்சிகள் அனுப்பப்படுகின்றன.

AI கருவி மூலம் பிள்ளைகளின் புகைப்படத்தை போலியாகத் தயாரித்து அவர்களுக்கு கிடைக்கச் செய்து பிள்ளைகளை மிரட்டுவதாக செய்திகள் வருகின்றன. இதனை பிள்ளைகளுக்கு அறிவுறுத்துவது முக்கியம்.

அத்தகைய புகைப்படம் ஒரு குழுவுக்கு அனுப்பப்பட்டால், விரைவில் டெலிகிராம் கணக்கை முடக்குவது முக்கியம்.

AI புகைப்படத்தைப் பற்றி ஒருபோதும் பயப்பட வேண்டாம். உங்கள் உண்மையான புகைப்படங்களை வேறொரு கணக்குக்கு அனுப்ப வேண்டாம்" - என்றார்.





**கொழும்பு டொரிங்டனிலுள்ள நாற்சதுர ஆலயத்தின் போதகர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, ஐ.டி.எம்.என்.சி. (IDMNC) சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனனம் அறக்கட்டளையின் தலைமை அறங்காவலருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆலயத்துக்கு கடந்த (08) ஞாயிற்றுக்கிழமை நேரடி விஜயம் மேற்கொண்டு தனது ஜனனம் அறக்கட்டளை ஊடாக நாற்காலிகளை வழங்கி வைத்தார்.**

# வாதுவையில் வீடொன்று தீக்கிரை



வாதுவ, பொதுப்பிட்டிய பிரதேசத்திலுள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் சொத்துகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக வாதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

வாதுவ, பொதுப்பிட்டிய, கரடகஹா வீதியிலுள்ள வீடொன்றே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கத்து வீட்டுக்கும் தீ பரவியதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் தீயை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லையென பொலிஸார் உறுதி செய்தனர்.

வீட்டினுள்ளே உள்ள சிறிய புத்தர் சிலைக்கு முன் வைக்கப்பட்ட எண்ணெய் விளக்கினால் தீ பரவியிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறித்த வீட்டிலிருந்த பெண் விளக்கை கவனிக்காமல் விட்டுச்சென்றதால் அது தீப்பற்றி எரிந்திருக்கக்கூடுமென சந்தேகிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், தீ பரவலுக்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. அதேவேளை, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பில் விருது விழா


Sip Abucus கல்வி நிலையத்தின் வருடாந்த விருது வழங்கும் விழா கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்வி நிலையத்தின் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெறும்.

மாணவர்களின் நுண்ணறிவை மேம்படுத்தும் நோக்கில் மேற்படி நிலையம் தேசிய மன எண்கணிதம் போட்டிகளை தேசிய ரீதியில் வருடாந்தம் நடத்தி வருகிறது.

இந்நிலையில், இவ்வருடம் நடத்தப்பட்ட மேற்படி போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்ற மாணவர்களே இதன்போது விருது, பரிசு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் ஆலோசகரும் புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகருமான புரவலர் ஹாஷிம் உமர் பங்கேற்கவுள்ளார்.

# அத்துமீறியோர் மீது நடவடிக்கை; சிரியா கிளர்ச்சிப் படை எச்சரிக்கை



சிரியாவில், பஷார் அல்-அசாத் ஆட்சியின் போது சித்திரவதை, அதிகார துஷ்பிரயோகம் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம் என, கிளர்ச்சிப் படை தலைவர் அபு முஹமது அல்- கோலானி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேற்காசிய நாடான சிரியாவில், ஷியா பிரிவைச் சேர்ந்த பஷார் அல்-அசாத் ஜனாதிபதியாக இருந்தார். இவருக்கும், பல கிளர்ச்சி குழுக்களுக்கும் இடையே கடந்த 13 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வந்தது. அபு முஹமது அல்-கோலானி தலைமையிலான ஹயாத் தாஹ்ரிர் அல் ஷாம் என்ற கிளர்ச்சிப் படை, சமீபத்தில், தலைநகர் டமாஸ்கசை கைப்பற்றியது. இதையடுத்து நாட்டை விட்டு தனி விமானத்தில் தப்பிய பஷார் அல்-அசாத் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார்.

இந்நிலையில், சிரியாவில் ஆட்சி அதிகார பரிமாற்றத்தை ஒருங்கிணைக்க, அந்நாட்டின் பிரதமர் முஹமது அல் - ஜலாலியை, கிளர்ச்சி படைத்தலைவர் அபு முஹமது அல் - கோலானி சந்தித்து பேசினார்.

இது தொடர்பாக, அபு முஹமது அல்-கோலானி சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவு:

''சிரியா மக்களுக்கு சேவை செய்ய உத்தரவாதம் அளிக்கும் அதிகார பரிமாற்றத்தை ஒருங்கிணைக்க, பிரதமர் முஹமது அல் - -ஜலாலியை சந்தித்து பேசினேன். நாட்டு மக்களை சித்திரவதை செய்த குற்றவாளிகள், அதிகார துஷ்பிரயோகம் செய்தவர்கள், கொலைகாரர்கள், அடக்குமுறையைக் கையாண்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம். அவர்கள் கடுமையான விளைவுகளை சந்தித்தே ஆக வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் 01 பில்லியன் டொலர் முதலீடு செய்யுங்கள்

## ட்ரம்ப் விசேட அறிவிப்பு




அமெரிக்காவில் 01 பில்லியன் டொலர் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு அனைத்து விதமான அனுமதிகளும் எளிதில் வழங்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். அவர் வரும் 2025ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார். அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு, உக்ரைன்-ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு வருவேன், அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறுவதை தடுப்பேன் என கூறியுள்ளார். இந்த சூழலில், அவர் தொழிலதிபர்களுக்கு சலுகை ஒன்றை அறிவித்துள்ளார்.

சமூகவலைத்தளத்தில், அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ''அமெரிக்காவில் 01 பில்லியன் டொலர் முதலீடு செய்யும் நபர் அல்லது நிறுவனங்களுக்கு அனைத்து விதமான அனுமதிகளும் எளிதில் வழங்கப்படும். அவர்களுக்கு எந்த விதமான தாமதமும் இன்றி அனைத்து கோரிக்கைகளுக்கும் அனுமதி வழங்குவோம். அனைவரும் தயாராகுங்கள்'' இவ்வாறு டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார். இதற்கு ட்ரம்பை எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க், ''நல்ல முடிவு'' என பாராட்டியுள்ளார்.

# அமெரிக்காவில் மக்களை ஒன்றிணைக்கும் புத்தர் சிலை!



அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் உள்ள நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்த 30 அடி உயர புத்தர் சிலை பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதத்தினரை ஒன்றிணைக்கும் ஆன்மிக மையமாக மாறி வருகிறது.

பிரின்ஸ்டன் அருகே ஃபிராங்ளின் டவுன்ஷிப்பில் உள்ள இந்த புத்தர் சிலை, பௌத்த மதத்தின் பழைமையான வடிவங்களில் ஒன்றான தேரவாதாவைச் சேர்ந்த இலங்கை பௌத்த தலைமையில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த புத்தர் சிலை அமைந்த பௌத்த விஹார் வளாகத்தில் பல்வேறு மதக் கூட்டங்களும் நடைபெறுகின்றன.

இதன் தாக்கமாக கொரிய கிறிஸ்தவ தேவாலயத்தில் வளர்ந்த பிரின்ஸ்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர், வளாகத்துக்கு அருகே பல ஆண்டுகளாக வாழ்ந்த பெண் ஒருவர் உள்ளிட்ட பலர் தற்போது பௌத்த மதத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் புத்தர் சிலையின்முன் தியானம் செய்து வருவதாக கூறும் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் டேனியல் சோய், 'இந்த இடம் வெவ்வேறு சமூக மக்களை இணைக்கும் ஒரு பாலமாக திகழ்கிறது. ஒரு பொது ஆலயமாக உணரமுடிகிறது.

அமெரிக்காவில் உள்ள பெரும்பாலான பௌத்த மையங்கள் தனியார் அமைப்புகளால் நடத்தப்படுகின்றன. அங்கு பல்வேறு சமூக மக்கள் சுதந்திரமாக பிரார்த்திக்க முடியாது. ஆனால், இங்கு அப்படியில்லை. அதுவே இந்த பௌத்த விஹாரின் தனிச்சிறப்பு' என்றார்.

சமண, சீக்கிய, இந்து சமய கோயில்களுடன் புதிதாக இணைந்துள்ள இந்த பௌத்த விஹாரும் நியூஜெர்சியின் மத பன்முகத்தன்மையைப் பிரதிபலிப்பதாக உள்ளூர் மக்கள் பெருமிதத்துடன் தெரிவித்தனர்.

# இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்க: வங்கதேச அரசிடம் இந்தியா வலியுறுத்தல்!



வங்கதேசத்தில் வாழும் இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அந்த நாட்டு அரசிடம் இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி வலியுறுத்தியுள்ளார்.

வங்கதேசத்தில் இடஒதுக்கீட்டை எதிர்த்து மாணவர்கள் நடத்திய போராட்டம் பெரும் கலவரமாக மாறியது. இதன்காரணமாக கடந்த ஓகஸ்ட் 05ஆம் திகதி பிரதமர் ஷேக் ஹசீனா பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். தற்போது வங்கதேசத்தில் முஹமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு ஆட்சி நடத்தி வருகிறது.

இந்த சூழலில் வங்கதேசம் முழுவதும் இந்துக்கள் மீதான தாக்குதல் அதிகரித்து வருகிறது. அதோடு பாகிஸ்தானோடு வங்கதேச அரசு அதிக நட்பு பாராட்டி வருகிறது. இதன்காரணமாக வங்கதேச எல்லை பகுதிகள் வழியாக இந்தியாவுக்குள் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவும் அபாயம் எழுந்திருக்கிறது.

ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி நேற்றுமுன்தினம் அரசு முறை பயணமாக வங்கதேச தலைநகர் டாக்காவுக்கு சென்றார். அங்கு வங்கதேச வெளியுறவு செயலாளர் முஹமது ஜசீம் உதினை சந்தித்துப் பேசினார். இதன்பிறகு வங்கதேச வெளியுறவு ஆலோசகர் முஹமது தவுகித் ஹூசைனுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் வங்கதேச இடைக்கால அரசின் தலைவர் முஹமது யூனுஸையும் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த சந்திப்புகள் தொடர்பாக இந்திய வெளியுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி, டாக்காவில் நிருபர்களிடம் கூறியதாவது: வங்கதேசத்தில் வாழும் சிறுபான்மையினரின் (இந்துக்கள்) பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினேன். இந்து கோயில்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து ஆழ்ந்த கவலையை தெரிவித்தேன். இதுதொடர்பாக வங்கதேச தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினேன்.

வங்கதேசம், இந்தியா இடையிலான உறவை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். எரிசக்தி, நதிநீர் பகிர்வு, மின்சாரம், வர்த்தகம் தொடர்பாக இரு நாடுகள் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இரு நாடுகளின் மக்கள் பலன் அடையும் இந்த திட்டங்களை தொடர்ந்து அமுல்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினேன் இவ்வாறு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது: பாகிஸ்தானில் இருந்து வங்கதேசத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது எவ்வித சோதனையும் நடத்த வேண்டாம் என்று வங்கதேச அரசு அறிவித்துள்ளது. இதை பயன்படுத்தி பாகிஸ்தானை சேர்ந்த தீவிரவாத குழுக்கள் ஆயுதங்கள், போதைப்பொருளை வங்கதேசத்தில் இறக்குமதி செய்து, அங்கிருந்து இந்தியாவுக்குள் கடத்த முயற்சி செய்யக் கூடும்.

இந்தியாவும் வங்கதேசமும் சுமார் 4,096 கி.மீ. தொலைவு எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளன. வங்கதேசத்தில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றத்தால் இந்தியாவின் எல்லைப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சியை தடுக்க தீவிரவாதம் மூலம் பாகிஸ்தான் மறைமுக போரை நடத்தி வருகிறது. இதற்கு தற்போதைய வங்கதேச அரசு ஆதரவு அளிப்பதாக தெரிகிறது.

இதை கண்டிக்கவும் வங்கதேசத்துக்கு பகிரங்க எச்சரிக்கை விடுக்கவும் இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி ஒரு நாள் பயணமாக வங்கதேசத்துக்கு திங்கட்கிழமை சென்றார். இந்த பயணம் ஆக்கபூர்வமாக இருந்தது. இனிமேல் வங்கதேச அரசின் செயற்பாட்டில் மாற்றம் ஏற்படும் என நம்புகிறோம். இவ்வாறு இந்திய பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கர்நாடக எழுத்தாளருக்கு வைக்கம் விருது!



2024ஆம் ஆண்டுக்கான வைக்கம் விருது கர்நாடகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் தேவநூர மஹாதேவாவுக்கு வழங்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், சட்டப் பேரவையில், கடந்த 30.03.2023 அன்று எல்லை கடந்து சென்று சமூக நீதிக்காக வைக்கத்தில் போராடிய தந்தை பெரியாரை நினைவுகூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் “வைக்கம் விருது” சமூகநீதி நாளான செப்டெம்பர் 17ஆம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று விதி 110இன்கீழ் அறிவித்தார்.

அந்த அறிவிப்புக்கிணங்க, 2024ஆம் ஆண்டுக்கான “வைக்கம் விருது” கர்நாடக மாநிலம், மைசூரு மாவட்டத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர் தேவநூர மஹாதேவாவுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேவநூர மஹாதேவா ஒரு சிறந்த எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர். மக்களின் மொழியியல் உரிமைகளின் மீதான நிலைப்பாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர். மேலும், சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகச் செயற்பட்டவர். இவர் மத்திய அரசின் உயரிய விருதான பத்மஸ்ரீ, சாஹித்திய அகாதெமி விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

# திருவண்ணாமலை மகா தீபம்: பக்தர்கள் மலையேற அனுமதி கிடையாது!



''திருவண்ணாமலையில் மகா தீப தினத்தன்று, மலையேற பக்தர்களுக்கு அனுமதி இல்லை. பரணி தீபத்துக்கு மட்டும் 300 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது'' என்று தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

சென்னையில் தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

''தீப திருவிழா தொடங்குவதற்கு முன்பே கடந்த மாதம் 18ஆம் திகதி துணை முதல்வர் உதயநிதி கிரிவலப் பாதையை ஆய்வு செய்தார். அம்மாவட்ட அமைச்சர் எ.வ.வேலு மற்றும் நானும் மூன்று முறை கள ஆய்வு செய்தோம். மாவட்ட ஆட்சியர் தலைமையில் கலந்தாய்வு கூட்டத்தையும் நடத்தினோம்.

அதைத்தொடர்ந்து தலைமைச் செயலாளர் தலைமையில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் இயக்குநர் தலைமையில் நியமிக்கப்பட்ட பேராசிரியர் பிரேமலதா தலைமையில் ஏற்படுத்தப்பட்ட 08 பேர் கொண்ட குழுவினர் கடந்த 07, 08 மற்றும் 09 ஆகிய திகதிகளில் கள ஆய்வு செய்து அதுதொடர்பான அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையில், இந்துசமய அறநிலையத்துறை அதிகாரிகளுடன் தலைமைச் செயலாளர் தலைமையில் கூட்டம் நடைபெற்றுள்ளது.

அந்த அறிக்கையில், “அதிகமான மனிதர்களை மலையின் மீது ஏற்றக்கூடாது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த முறை பக்தர்கள் யாரும், மலையின் மீது ஏற அனுமதி கிடையாது. அதுதொடர்பான அறிவிப்பை அம்மாவட்ட ஆட்சியர் முறையாக வெளியிடுவார். அதேநேரம், மலை உச்சியில் தீபம் ஏற்ற மேலே கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள், 350 கிலோ கொண்ட திரி உள்ளிட்ட மற்ற பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. முதல் நாளுக்கு தேவைப்படுகிற 40 டின் நெய், அதாவது ஒரு டின்னுக்கு 15 கிலோ என்றால் 600 கிலோ நெய்யை மேலே கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

அதை எடுத்துச் செல்லும் நபர்களுக்குத் தேவையான உணவு, காவலர்கள், வனத்துறை உட்பட எவ்வளவு நபர்கள் செல்ல வேண்டும் என்று அறிக்கையில், அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அந்தளவுக்கு மட்டுமே மனிதசக்தி பயன்படுத்தப்படவுள்ளது. ஏற்கெனவே இந்த தீபத்துக்காக, ஆவினிடமிருந்து 4500 கிலோ நெய் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பரணி தீபத்துக்கு மட்டும் 300 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது'' - இவ்வாறு அவர் கூறினார்.

# சிரியாவின் வீழ்ச்சி உலகப் போரின் முதல் புள்ளியா?

## பயமுறுத்தும் பாபா வங்காவின் ஆரூடம்



பாபா வங்கா... இந்தப் பெயரை ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

பல்கேரியா நாட்டின் பெலாசிகா பகுதியைச் சேர்ந்த பெண்மணி இவர். சின்ன வயதில் கண் பார்வையை இழந்த பாபா வங்கா, வருங்கால உலகில் இனி என்னென்ன நடக்கும் என்று ஆரூடங்களைச் சொல்ல ஆரம்பித்தார்.

அந்த வகையில் பாபா வங்காவுக்கு, 'பால்கன் பகுதியின் பெண் நாஸ்டிரடாமஸ்' என்ற பெயர் கூட உண்டு. (பிரான்ஸ் நாட்டில் பழங்காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசி நாஸ்டிரடாமஸ், நூற்றாண்டுகள் என்ற புத்தகத்தின் மூலம் எதிர்கால உலகத்தைப் பற்றி ஏராளமான சங்கதிகளை புட்டுப்புட்டு வைத்தவர்)

பாபா வங்கா, எதிர்காலத்தில் அதாவது 5079ஆம் ஆண்டு வரை என்னென்ன நடக்கும் என்று கூறியிருக்கிறார். இவரது ஆரூடங்களில் 85 வீத ஆரூடங்கள் பலித்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சரி, இப்போது எதற்கு பாபா வங்காவைப் பற்றி நாம் பேச வேண்டும் என்ற கேள்வி எழலாம். மேற்கு ஆசிய நாடான சிரியாவில் தற்போது ஆட்சி கவிழ்ந்து, சிரிய கிளர்ச்சியாளர்கள் கையில் சிக்கிவிட்ட நிலையில் பாபா வங்கா பற்றிய நினைப்பு உலக அளவில் பலருக்கு மீண்டும் வந்திருக்கிறது.

**ஏன்,என்ன காரணம்?**

'சிரியாவின் வீழ்ச்சிக்குப்பிறகு மூன்றாம் உலகப்போர் தொடங்கும்' என்று பாபா வங்கா ஏற்கெனவே ஆரூடம் கூறியிருப்பதுதான் காரணம்.

1996ஆம் ஆண்டு, பாபா வங்கா மரணமடைவதற்கு முன் கூறிய ஆரூடம் இது. 'சிரியா நாடு நிலைகுலையும். சிரியாவின் இந்த வீழ்ச்சி, ஒரு பெரும்போருக்கான முன்னறிவிப்பும் தொடக்கப் புள்ளியும் ஆகும்' என்று கூறியிருக்கிறார் பாபா வங்கா.

'வெற்றியாளரின் காலில் சிரியா விழுந்துவிடும். அந்த வெற்றியாளர் ஒருவர் இல்லை' என்பது பாபா வங்கா கூறியிருப்பது பலரையும் இப்போது வியப்புக்குள்ளாக்கி வருகிறது.

சிரியாவில் ஜனாதிபதி பசர்-அல்-அசாத்தின் ஆட்சி கவிழ்ந்த நிலையில் தலைநகர் டமஸ்கஸை, ஹாயத்-தஹ்ரீர்-அல்-ஷாம் (ஹெச்.டி.எஸ்.) என்ற கிளர்ச்சிப்படை கைப்பற்றி இருக்கிறது. அதற்கு துருக்கி நாட்டின் 'துருக்கி தேசிய இராணுவம்' என்ற மற்றொரு கிளர்ச்சிப் படை உதவி புரிந்திருக்கிறது. இதுபோக சிரியாவில் ஐ.எஸ். படை, குர்த் இனப் போராளிகள் என பல்வேறு ஆயுதக் குழுக்கள் உள்ளன. ஜனாதிபதி பசர்-அல்-அசாத் வீழ்ந்ததை இவர்கள் அனைவருமே வெற்றியாகவே நினைக்கிறார்கள்.

இந்த நிலையில், 'சிரியாவில் வெற்றியாளர் ஒருவர் இல்லை' என்று அந்தக்காலத்திலேயே துல்லியமாக வரும்பொருள் உரைத்திருக்கிறார் பாபா வங்கா.

பாபா வங்காவின் கணிப்புப்படி பார்த்தால் 2025ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் பெரும்போர் (மூன்றாம் உலகப்போர்?) மூளும் என்று தெரிகிறது. 'கிழக்கும் மேற்கும் மோதிக்கொள்ளும். கிழக்கில் தொடங்கும் போர் மேற்கை அழிக்கும்' என்று கணித்திருக்கிறார் பாபா வங்கா.

'2025 ஆம் ஆண்டு ஐரோப்பா கண்டம் அழிவைச் சந்திக்கும். மக்கள் தொகை குறைந்து, ஐரோப்பா பயன்படாத நிலமாக மாறும்' என்பது பாபா வங்காவின் கணிப்பு.

'2025இல், அபோகலப்ஸ் என்ற பேரழிவு தொடங்கும். வேற்றுலக உயிர்களுடன் தொடர்பு உருவாகும். கருவிகளின் துணையின்றி பேசக்கூடிய டெலிபதி என்ற எண்ணத்தொடர்பு முறை வளரும். புற்றுநோய்க்கு எதிரான மிகச்சிறந்த மருந்து கண்டுபிடிக்கப்படும்' என்பதெல்லாம் பாபா வங்காவின் இதர கணிப்புகள்.

ஆரூடங்களில் பிரசித்தமான நாஸ்டிரடாமஸும் கூட, '2025 ஆம் ஆண்டு ஒரு போர் வெடிக்கும், ஐரோப்பா கண்டத்துக்குச் சிக்கல் ஏற்படும்' என்று கூறியிருக்கிறார். 'பிளேக் மாதிரியான கொள்ளை நோய் ஐரோப்பாவில் பரவும்' என்றும் நாஸ்டிரடாமஸ் எச்சரித்திருக்கிறார்.

அண்மையில், கொரோனா என்ற பெருந்தொற்றை உலகம் ஏற்கெனவே சந்தித்து முடித்து விட்டது. இந்தநிலையில் நாஸ்டிரடாமஸ் எச்சரிக்கும் 'பிளேக்' இதுபோன்ற இன்னுமொரு பெருந்தொற்றா என்பது தெரியவில்லை. ஒருவேளை கொரோனா பெருந்தொற்றுகூட மாறுவேடம் அணிந்து, 2025 ஆம் ஆண்டில் இன்னொரு சுற்று வரக்கூடும்.

ஒருவகையில் 2025இல் பிளேக் நோய் என்று நாஸ்டிரடாமஸ் கூறியிருப்பது பாராட்டத்தக்க ஒரு கணிப்பு. 'பிளேக் என்பது எலிகளால் பரப்பப்படும் நோய். போர் என்பது மனிதர்களால் பரப்பப்படும் பிளேக் நோய்' என்று ஒரு பொன்மொழி உண்டு. அந்த வகையில் மூன்றாம் உலகப் போரைத்தான் பிளேக் என்று நாஸ்டிரடாமஸ் நாசூக்காக கூறியிருக்கிறாரா எனத் தெரியவில்லை.

'ஐரோப்பாவில் நடக்கும் போர் உலகப் பேரழிவாக விரிவடையும்' என்றும் நாஸ்டிரடாமஸ் கூறியிருக்கிறார்.

தற்போது சிரியாவில் நடந்து முடிந்த போர்கூட, ஒருவகையில் ஒரு மினி உலகப்போர் மாதிரியானதுதான். சிரிய இராணுவம், ரஷ்யப் படையினர், துருக்கி இராணுவம், குர்து போராளிகள், அவர்களுக்குத் துணையாக 900 அமெரிக்கப் படையினர், ஐ.எஸ். படை, துருக்கி தேசிய இராணுவம், ஹாயத்-தஹ்ரீர்-அல்-ஷாம் கிளர்ச்சிப் படை, லெபனானில் இயங்கும் ஹிஸ்புல்லா அமைப்பு, ஈரான், இஸ்ரேல் நாடுகளின் தலையீடு என்று சிரியாவில் கிட்டத்தட்ட ஒரு மினி உலகப்போர் நடந்து இப்போது இடைவேளை விடப்பட்டிருக்கிறது.

இந்தநிலையில்தான், வரும் ஆண்டில் மூன்றாம் உலகப்போர் வெடிக்கும் என்று நாஸ்டிரடாமஸ், பாபா வங்கா போன்றவர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

பாபா வங்கா சொன்ன 85 வீத ஆரூடங்கள் ஏற்கெனவே பலித்திருக்கின்றன என்று பார்த்தோம். அமெரிக்காவில் நடந்த செப்டெம்பர் 11 இரட்டைக் கோபுரத் தாக்குதலை, 'பயங்கரம் பயங்கரம் அமெரிக்கா மீதான இரண்டு எஃகு பறவைகளின் தாக்குதல்' என்று பாபா வங்கா முன்கூட்டியே கணித்திருந்தார். 'எஃகு பறவைகள்' என்று அவர் கூறியது தாக்குதலுக்குப் பயன்பட்ட பயணிகள் விமானங்களை என்பது இப்போது புரிகிறது.

அதுபோல அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியாக கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவர் வருவார் என்பதும் பாபா வங்காவின் கணிப்பு. அதன்படி பராக் ஒபாமா, அமெரிக்காவின் 44ஆவது அதிபராக வந்து அந்த கணிப்பை மெய்யாக்கினார்.

இதுபோல இளவரசி டயானாவின் மரணம், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறும் (பிரெக்சிட்) என்பன போன்ற பாபா வங்காவின் பல ஆரூடங்கள் துல்லியமாக பலித்திருக்கின்றன.

பாபா வங்காவின் 85 வீத ஆரூடங்கள் பலித்திருக்கும் நிலையில், வரும் ஆண்டில் மூன்றாம் உலகப்போர் தொடங்கும் என்று பாபா வங்கா கணித்திருப்பது உலக அளவில் ஒருவித பதற்றத்தை உருவாக்கி வருகிறது.

# வடக்கு ஆளுநர் - பிரித்தானிய தூதரக பிரதிநிதி சந்திப்பு



(பு.கஜிந்தன்)

''இந்த அரசாங்கத்தின் காலத்தில் தமது பிரச்சினைகள் தீர்க்கப்படுமென மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்'' என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரித்தானிய தூதரகத்தின் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதனிலைச் செயலர் ஹென்றி டொனைட்டிடம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (10) காலை இடம்பெற்ற சந்திப்பின்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமைக்கு முதலில் வாழ்த்துகளைத் தெரிவித்த முதனிலைச் செயலர், வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அறிவது தனது பயணத்தின் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். குறிப்பாக, மக்களின் காணிகள் கடந்த காலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்திருந்த சந்தர்ப்பங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எமது ஆளுகைக்கு உட்பட்டதாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமையால் தற்போது சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

விவசாயிகளின் வாழ்வாதாரம் இதனால் கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. வடக்கு மாகாண மக்களின் முக்கியமான பிரச்சினையாக இது உள்ளது.

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் இருப்பதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அவை விரைவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

வலி. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் நீண்ட காலம் இருந்த வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டமை சிறந்த நடவடிக்கை. மக்கள் மேலும் வீதிகளை, காணிகளை விடுவிக்கக் கோருகின்றனர். அத்துடன், பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் மற்றும் வீதித் தடைகள் என்பன அகற்றப்பட்டுள்ளன.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளமையால் அதிகளவில் வருகின்றனர். அடுத்த ஆண்டு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த திட்டமிடப்பட்டிருக்கின்றது.

மேலும் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் இளையோருக்கான வேலைவாய்ப்புகளை வழங்கும் நோக்கிலும் பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கப்படவுள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொதிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் விரைவில் அதற்கும் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் தமிழகத்தில் அண்ணளவாக ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர். அவர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்குரிய வாழ்வாதார, வதிவிட உதவிகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தின் பிரதான வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டபோதும் உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அவற்றை எதிர்காலத்தில் விரைந்து அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கின்றோம். தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலேயே அபிவிருத்திகளைச் செய்து முடிக்கலாம் என நம்புகின்றோம் என்றார்.

அதேவேளை, ஐ.நா. முகவர் அமைப்புகளூடாக பிரித்தானிய அரசாங்கம் கடந்த காலங்களில் வடக்கு மக்களுக்கு மேற்கொண்ட உதவிகளுக்கு ஆளுநர் நன்றிகளையும் தெரிவித்தார்.

# ''மீளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படலாமா என்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறோம்''

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



(வவுனியா நிருபர்)

''முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படலாமா என்பது தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்றோம்'' – என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட ஒலிபெருக்கி சாதனங்கள் தெரிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு நேற்று முன்தினம் (10) வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருடன் கலந்துரையாடலொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கிறோம். எமது பாராளுமன்றக் குழுவில் ஓர் ஒற்றுமை வேண்டும் என்று நினைக்கிறேன். அந்த ஒற்றுமை இல்லாமையால் எமது தேசத்தில் பல மாற்றங்கள் உருவாகியுள்ளன. அது தொடர்ந்தால் இங்கு இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். இனம் சார்ந்த விடுதலையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற வகையிலே நாம் ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைந்தால் மக்கள் எங்களுடன் நிற்பார்கள். எனவே பாராளுமன்றுக்குள்ளும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓர் அணியாகச் சேர்ந்து பொது விடயங்களில் ஒன்றாகக் குரல் கொடுக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் வடக்கு - கிழக்கில் முன்னர் ஒன்றாக இருந்த கட்சிகளை மீள ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படலாமா என்பது தொடர்பிலும் பேசிக்கொண்டிருக்கிறோம்.

அத்துடன், பெருவாரியான வாக்குகளைப் பெற்ற இந்த அரசாங்கத்தின் ஜனாதிபதி பேசியபோது அரிசி ஒரு மணி கூட வெளியிலிருந்து இறக்கமாட்டோம் என்று சொல்லியிருந்தார். ஆனால், இன்று நிலைமை மாறி இறக்குமதி செய்யும் சூழல் வந்துள்ளது. சர்வதேச நாணய நிதிய விடயத்தில் எந்தவொரு மறுப்பும் தெரிவிக்காமல் இவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.இந்த நிலைமையில் அரசாங்கம் சென்றால் மீண்டும் வரிசையுகம் ஏற்படும். அரசாங்கம் நிதானமாகச் செயற்பட வேண்டும். இன்று சாதாரண மக்களுக்குக் கூட தேங்காய் வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் சூழலை மாற்றவேண்டும் - என்றார்.

# பால்நிலை அடிப்படையிலான வன்முறையை தடுத்தல் - பாதுகாத்தல் தொடர்பில் செயலமர்வு



(சாவகச்சேரி நிருபர்)

''பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வர ஒன்றுபடுவோம்'' எனும் தொனிப்பொருளிலான 16 நாள் செயற்பாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் (10) செவ்வாய்க்கிழமை கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் கிறிசலிஸ் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டது.

கிறிசலிஸ் நிறுவனத்தின் திட்ட இயக்குனர் அஹமட் ரிஸ்லான் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பித்தார்.

மேலும், வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசன், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வட பிராந்திய இணைப்பாளர் கனகராஜ், யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர், திணைக்கள அதிகாரிகள், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் கிறிசலிஸ் நிறுவனப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது விசேட அம்சங்களாக பால்நிலை அடிப்படையிலான வன்முறையைத் தடுத்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்பாட்டுக்குத் தேவையான கூட்டு நடவடிக்கைகள் தொடர்பான குழுநிலை விவாதம், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முறையிடுவதற்கான தபால் பெட்டியை அறிமுகம் செய்தல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

# இளையோரின் உரிமைகளை வென்றெடுக்க மன்னாரில் விழிப்புணர்வு ஊர்வலம்










(ஜோசப் நயன்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ), இளையோர்களை ஒன்றிணைத்து நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை (10) காலை 11 மணியளவில் விழிப்புணர்வு ஊர்வலமொன்றை நடத்தியது.

இளையோர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் குரல் கொடுக்கும் முகமாக மன்னார் பஸார் பகுதியிலிருந்து குறித்த ஊர்வலம் ஆரம்பமானது.

மக்களை கவரும் வகையில் மேற்கத்தேய இசை வாத்தியமும் இடம்பெற்றது.

மன்னார் பஸார் பகுதியிலிருந்து ஆரம்பமான குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மீண்டும் மன்னார் பஸ் நிலையத்தை சென்றடைந்தது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற வர்த்தகச் சந்தை



(ஜோசப் நயன்)

மன்னார் மாவட்ட வர்த்தகச் சந்தையும் கண்காட்சியும் நேற்று புதன்கிழமை (11) காலை 9.30 மணியளவில் மன்னார் நகர பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்துகொண்டு வர்த்தகச் சந்தை மற்றும் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

உதவி மாவட்ட செயலாளர் பரந்தாமன், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் உட்பட அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

குறித்த வர்த்தக சந்தை மற்றும் கண்காட்சியில் உள்ளூர் சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு, மலிவு விற்பனையும் இடம்பெற்றது.

# 'தமிழ் அறிவு' நூல் வெளியீடு



(பு.கஜிந்தன்)

காவேரி கலா மன்றம் மற்றும் தாய்நிலம் பதிப்பகம் இணைந்து நடத்திய, மறைந்த கவிஞர் க.பே.முத்தையா எழுதிய 'தமிழ் அறிவு' நூல் வெளியீட்டு விழா கடந்த திங்கட்கிழமை (09) யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மண்டபமொன்றில் இடம்பெற்றது.

மறைந்த கவிஞர் க.பே.முத்தையா எழுதிய ஏழாவது படைப்பாக இந்த நூல் அமைந்துள்ளது.

பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை முனைவர் மனோன்மணி சண்முகதாஸும் நூலின் ஆய்வுரையை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும் ஆற்றியிருந்தனர்.

நூலின் முதற் பிரதியை பேராசிரியர் ரட்ணஜீவன் எச்.ஹூல் வழங்க, பேராசிரியர் அ.சண்முகதாஸ் அதனை பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் காவேரி கலா மன்றத்தினர், தமிழ் அறிஞர்கள், மாணவர்கள், கல்விமான்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# அனர்த்த காலத்தில் மீனவர்களுக்கு நிவாரணம் இல்லை; வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்குங்கள்!

## பணிப்பாளர் ஜான்சன் வேண்டுகோள்




(பு.கஜிந்தன்)

அனர்த்த காலத்திலோ அல்லது அனர்த்த முன்னெச்சரிக்கையான காலப் பகுதிகளில் கடலுக்குச் செல்லாத மீனவக் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் ஜான்சன் பிரிறாடோ வேண்டுகோள் விடுத்தார்.

யாழிலுள்ள விடுதியில் கடந்த திங்கட்கிழமை (09) இடம்பெற்ற வடக்கு, கிழக்கு இளம் மீனவ கூட்டமைப்பின் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் அண்மையில் புயல் எச்சரிக்கை விடுத்தமையால் மீனவர்கள் கடலுக்கு செல்லாது பாதுகாப்பாக வீடுகளில் தங்கியிருந்தார்கள்.

உண்மையில் அவர்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் வரவேற்கின்ற நிலையில், வடக்கு, கிழக்கில் வாழுகின்ற பெரும்பாலான மீனவர்கள் கரையோர மீன்பிடியை நம்பியே தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு புயல் எச்சரிக்கைகள் விடுக்கப்படும் நேரங்களில் அவர்கள் தமது வாழ்வாதாரத்தைக்கொண்டு நடத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஏனெனில், ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் கடலில் தரித்து நின்று மீன்பிடியில் ஈடுபடுகின்ற நிலையில் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவ மக்கள் ஒவ்வொரு நாளும் கடலுக்குள் செல்ல வேண்டும்.

புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டால் கடலுக்குள் செல்ல முடியாத சந்தர்ப்பங்களில் அவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

ஆகவே, எதிர்வரும் வருடம் ஆரம்பப் பகுதியில் வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் மீனவ மக்களின் நலன் கருதி அனர்த்த காலத்தில் நிவாரணம் வழங்குவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் - என்றார்.

# டிக்வெல்லவின் தடை அதிரடியாக நீக்கம்!

(அகீல் சிஹாப்)



லங்கா பிரீமியர் லீக் ரி20 தொடரின்போது ஊக்க மருந்து பாவித்த குற்றச்சாட்டுக்காக அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் ஆட தடைக்குள்ளாகியிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான நிரோஷன் டிக்வெல்லவின் தடை உடன் அமுலாகும் வகையில் நீக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது இலங்கையின் ஊக்க மருந்து தடுப்பு அதிகாரசபை இலங்கை கிரிக்கெட் சபையுடன் இணைந்து மேற்கொண்ட பரிசோதனைகளின் அடிப்படையில் அப்போதைய கோல் மார்வல்ஸ் அணியின் தலைவரான நிரோஷன் டிக்வெல்ல ஊக்க மருந்து பாவித்த விடயம் கண்டறியப்பட்டது. இதனையடுத்து அவருக்கு உடன் அமுலாகும் வகையில் தடை விதிக்கப்பட்டது.

அதனையடுத்து, நிரோஷன் டிக்வெல்ல தொடர்ந்த மேன்முறையீட்டின் பிரகாரம் உலக ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் (வாடா) இலங்கை கிரிக்கெட் வீரர் நிரோஷன் டிக்வெல்லவின் கிரிக்கெட் தடையை 03 ஆண்டுகளில் இருந்து 03 மாதங்களாக குறைத்துள்ளது.

இதன் மூலம் டிக்வெல்ல உடனடியாக மீண்டும் விளையாடத் தகுதி பெற்றுள்ளார். டிக்வெல்ல செய்த முறையீட்டைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணைகளில் அவர் பயன்படுத்தியதாக குறிப்பிடப்படும் ஊக்கமருந்தானது விளையாட்டுடன் தொடர்பில்லாததுடன், அது மைதானத்துக்கு வெளியே எடுக்கப்பட்டது எனவும் கண்டறியப்பட்டது.

அந்தவகையில், ஒழுக்காற்றுக் குழுவினால் விதிக்கப்பட்ட டிக்வெல்லவின் மூன்று வருட தடைக்காலம் கடந்த ஓகஸ்ட் 13ஆம் திகதி முதல் 03 மாதங்களாக குறைக்கப்பட வேண்டும் என உலக ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் அறிவித்தது.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட்டின் அனுமதிக்காக டிக்வெல்லவின் உள்ளூர் கிரிக்கெட் கழகம் காத்திருப்பதாக அந்த கழகத்தின் செயலாளர் பர்வீஸ் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். டிக்வெல்ல கழகத்தில் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இலங்கை கிரிக்கெட்டின் முடிவின் அடிப்படையில் அவரது தகுதி குறித்து எதிர்கால முடிவு எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

# தந்தையாகும் கான்வே அணியிலிருந்து விலகல்



இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இருந்து நியூஸிலாந்து அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரரான டெவான் கான்வே விலகுவதாக அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து அணி தற்சமயம் நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 03 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. தொடரின் முதல் இரு போட்டிகளிலும் வெற்றியிட்டிய இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான மூன்றாவதும் இறுதியுமான போட்டி 14ஆம் திகதி ஹமில்டனில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், நியூஸிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான டெவோன் கொன்வே 3ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

டெவோன் கொன்வே – கிம் தம்பதிக்கு இந்த வாரத்தில் முதலாவது குழந்தை பிறக்க உள்ளதால் அவர் இந்த போட்டியில் இருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப்போட்டிக்கான நியூஸிலாந்து அணியில் மார்க் சாப்மேன் சேர்க்கப்பட்டுள்ளார். ஹொங்கொங்கை பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது சகலதுறை வீரரான இவர், நியூஸிலாந்து அணிக்காக இதுவரை 26 ஒருநாள் மற்றும் 78 ரி20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இவர் இன்னும் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கடைசி இரு டெஸ்ட்டுக்காக இந்திய அணியில் இணையும் ஷமி



அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் பார்டர்-கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரின் இறுதி இரு டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவின் ஷமி பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் முஹமட் ஷமி கணுக்கால் காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்து கொண்டார். இதிலிருந்து மீண்ட இவர், ரஞ்சி கிண்ண தொடரில் பெங்கால் சார்பில் 43 ஓவர் வீசினார். தற்போது சையது முஷ்தாக் அலி டிராபியில் பெங்கால் அணிக்காக விளையாடி வருகிறார்.

இத்தொடருக்கு பின், என்.சி.ஏ., சார்பில் ஷமியின் உடற்தகுதி பரிசோதிக்கப்படும். இதில் தேர்ச்சி பெறும் பட்சத்தில், அவுஸ்திரேலியாவில் நடக்கும் பார்டர்-கவாஸ்கர் தொடரின் கடைசி 02 டெஸ்டில் (மெல்போர்னில் டிச. 26-30, சிட்னியில் 2025, ஜன. 3-7) விளையாடுவார்.

ஏற்கனவே இவரது கிரிக்கெட் உபகரணங்கள் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டன.

இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி கூறுகையில், போதுமான உள்ளூர் போட்டிகளில் ஷமி விளையாடிவிட்டார். இவரை உடனடியாக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பினால் நல்லது. பும்ரா மீதான சுமை குறையும் என்றார். தற்போது நிறைவடைந்துள்ள இரு டெஸ்ட் போட்டிகளில் 1-1 என இரு அணிகளும் சமநிலையில் உள்ளன.

# அமெரிக்காவின் தேசிய கிரிக்கெட் லீக்குக்கு தடை



சர்வதேச கிரிக்கெட் பேரவை எனப்படும் ஐ.சி.சியானது அமெரிக்காவின் தேசிய கிரிக்கெட் லீக்குக்கு தடை விதித்துள்ளது. அணியின் ஆடும் லெவனில் விதிகளை மீறியதற்காக இவ்வாறு அமெரிக்காவின் தேசிய கிரிக்கெட் லீக்கை (என்.சி.எல்) ஐ.சி.சி தடை செய்துள்ளது.

குறைந்தபட்சம் 07 அமெரிக்க கிரிக்கெட்டைச் சேர்ந்த அல்லது அசோசியேட் வீரர்கள் எல்லா நேரங்களிலும் களத்தில் இருக்க வேண்டும் என்ற விதிகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. ஆனால் லீக் போட்டியில் ஆறு வெளிநாட்டு வீரர்கள் களத்தில் விளையாடியுள்ளனர்.

இதன் காரணமாக எதிர்கால லீக்கை அனுமதிக்க மாட்டோம் என்று ஜெய் ஷா தலைமையிலான ஐ.சி.சி. நிர்வாகக்குழு முடிவெடுத்துள்ளது.

# பெக்சிங் டே டெஸ்ட் போட்டிக்கான டிக்கெட்கள் அனைத்தும் விற்பனை



இந்திய – ஆஸி. அணிகள் மோதும் பார்டர் கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரின் பெக்சிங் டே டெஸ்ட் போட்டிக்கான முதல் நாள் டிக்கெட்கள் அனைத்தும் விற்பனையாகியுள்ளன.

05 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட்டில் இந்தியாவும் 2ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணியும் வெற்றி பெற்றன. இதனையடுத்து 3ஆவது டெஸ்ட் போட்டி வருகிற சனிக்கிழமை ஆரம்பமாகிறது. இதனைத் தொடர்ந்து 4ஆவது டெஸ்ட் போட்டி மெர்ல்போனில் டிசம்பர் 26ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த டெஸ்ட் போட்டி பொக்சிங் டே போட்டியாக நடைபெறவுள்ளது. பொதுவாகவே, டிசம்பர் 26ஆம் திகதி நடைபெறும் டெஸ்ட்களை பொக்சிங் டே டெஸ்ட் என அழைப்பார்கள்.

கிறிஸ்மஸ் விழாவுக்கு அடுத்த நாள் ஆரம்பமாகும் போட்டிகளை பொக்சிங் டே போட்டி என ஒவ்வொரு ஆண்டும் விளையாடப்படுகிறது. இதனால் இந்த போட்டிகளுக்கு ரசிகர்கள் ஆர்வமுடன் இருப்பார்கள். மெர்போர்ன் ஒரு இலட்சம் பார்வையாளர்கள் பார்க்கக்கூடிய அளவில் மிக பெரிய ஸ்டேடியம் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக். கிரிக்கெட் வரலாற்றில் முதல் வீரராக சாதனை படைத்த ஷஹீன் அப்ரிடி



சர்வதேச கிரிக்கெட்டில் மூன்றுவகை போட்டிகளிலும் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய பாகிஸ்தானின் முதல் பந்துவீச்சாளர் என்ற சாதனையை ஷஹீன் அப்ரிடி படைத்துள்ளார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ரி20 போட்டியில் ஷஹீன் அப்ரிடி மூன்று விக்கெட்டுகளை கைப்பற்றியதன் மூலம் 100 விக்கெட்டுகளை கடந்தார்.

இவர் ஒருநாள் போட்டிகளில் 112 விக்கெட்டுகளையும் டெஸ்ட் கிரிக்கெட்டில் 116 விக்கெட்டுகளையும் கைப்பற்றி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக பாகிஸ்தான் அணியின் ஹாரிஸ் ரவுஃப் மற்றும் ஷதாப் கான் ஆகியோரும் ரி20 கிரிக்கெட்டில் 100 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளனர்.

முன்னதாக தனது 71ஆவது ரி20 போட்டியில் 100 விக்கெட் சாதனையை நிகழ்த்திய வேகப்பந்து வீச்சாளர் ஹரிஸ் ரவுஃப்க்கு பிறகு பாகிஸ்தான் அணிக்காக ரி20 கிரிக்கெட்டில் 100 விக்கெட்டுகளை மிக வேகமாக எடுத்த இரண்டாவது வீரர் ஆனார் ஷஹீன் அப்ரிடி.

# தென்னாபிரிக்க மண்ணில் பார்ள் ரோயல்ஸ் அணியில் ஆடவுள்ள துனித்

தென்னாபிரிக்காவில் நடைபெறும் ரி20 லீக் தொடரான எஸ்.ஏ20 லீக் தொடரில் பார்ள் ரோயல்ஸ் அணியில் விளையாடும் வாய்ப்பை இலங்கை அணியின் இளம் பந்துவீச்சு சகலதுறை வீரர் துனித் வெல்லாலகே பெற்றுக்கொண்டுள்ளார்.

எஸ்.ஏ20 லீக் தொடரின் 3ஆவது சீசன் ஜனவரி 09ஆம் திகதி முதல் பெப்ரவரி 08ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் பார்ள் ரோயல்ஸ் அணியில் இங்கிலாந்து அணியின் ஜேக்கப் பெத்தேல் இடம்பிடித்திருந்தார். எனினும், குறித்த தொடர் நடைபெறுகின்ற காலப்பகுதியில் இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள ரி20 தொடருக்கான இங்கிலாந்து அணிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் குறித்த தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இதன் காரணமாக துனித் வெல்லாலகே அணியில் இடம்பெறும் வாய்ப்பை பெற்றுள் ளார்.



அதன் படி மதீஷ பத்திரண மற்றும் மஹிஷ் தீக்ஷன ஆகியோர் ஜோபர்க் சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடவுள்ள நிலையில், நுவன் துஷார எம்.ஐ கேப்டவுன் அணிக்காக விளையாடவுள்ளார்.

முன்னதாக கடந்த சில மாதங்களுக்கு முன் நடை பெற்ற கரீபியன் பிரீமியர் லீக்கில் பார்படோஸ் றோயல்ஸ் அணிக்காக துனித் வெல்லாலகே விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

3ஆவது மகளிர் பிரீமியர் லீக் (டபிள்யூ.பி.எல்.) ரி20 ஓவர் கிரிக்கெட் தொடரில் அடுத்த ஆண்டு பெப்ரவரி - மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில் வீராங்கனைகளின் மினி ஏலம் எதிர்வரும் 15ஆம் திகதி பெங்களூரில் நடைபெறுகிறது. ஒரு அணிக்கு ரூ.15 கோடி வரை செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ஒன்றரை கோடி அதிகமாகும்.

★★★★

2015ஆம் ஆண்டு ஆரம்பமான பகலிரவு டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிவேக சதமடித்த வீரர் என்ற உலக சாதனையை டிராவிஸ் ஹெட் படைத்துள்ளார். இந்த பட்டியலில் முதல் 03 இடங்களிலுமே டிராவிஸ் ஹெட் (111, 112, 125 பந்துகள்) உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

★★★★

இந்தியாவுடனான 2ஆவது டெஸ்டில் பேட் கம்மின்ஸ் கேப்டனாக 05 விக்கெட்டுகளை 8ஆவது முறையாக கைப்பற்றினார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் கேப்டனாக அதிக முறை 05 விக்கெட்டுகள் கைப்பற்றிய 3ஆவது வீரர் என்ற இந்திய முன்னாள் கேப்டனான பிஷன் சிங் பேடியின் வாழ்நாள் சாதனையை சமன் செய்தார். இந்த பட்டியலில் இம்ரான் கான் (12 முறை) முதலிடத்தில் உள்ளார்.

★★★★

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) நிறைவுக்குவந்த சுற்றுலா பங்களாதேஷ் – இலங்கை 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிகள் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான மூன்று நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

★★★★

நியூஸிலாந்து அணியுடனான 2ஆவது டெஸ்ட் போட்டியில் அரைச்சதம் விளாசியதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 100 முறை 50 ஓட்டங்களுக்கு மேல் குவித்த 4ஆவது வீரர் என்ற சாதனையை இங்கிலாந்தின் ஜோ ரூட் படைத்துள்ளார். முதல் வீரராக சச்சின் டெண்டுல்கர் (119 முறை) உள்ளார். 2ஆவது, 3ஆவது இடங்கள் முறையே தென்னாபிரிக்கா வீரர் ஜெக் கலீஸ் (103 முறை), அவுஸ்திரேலிய வீரர் ரிக்கி பொண்டிங் (103 முறை) ஆகியோரை தொடர்ந்து ரூட் 4ஆவது இடத்தில் உள்ளார். 5ஆவது இடத்தில் ராகுல் டிராவிட் (99 முறை) உள்ளார்.

★★★★

பங்களாதேஷுக்கு எதிரான முதல் போட்டியின் போது கள நடுவர்களிடம் அநாகரிகமாகவும் தகாத வார்த்தைகளையும் பயன்படுத்திய வெஸ்ட் இண்டீஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அல்சாரி ஜோசப்புக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 25 சதவீத கட்டணம் அபராதமாக விதிக்கப்பட்டது. இந்த அபராதம் குறித்த அறிவிப்பானது 2ஆவது ஒருநாள் போட்டி தொடங்கும் சில மணி நேரங்களுக்கு முன்னரே வெளியானது. இதனால் 2ஆவது போட்டிக்கான அணியிலும் அல்சாரி ஜோசப்பின் பெயர் இடம்பெறவில்லை.

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டுச் செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்கமாக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.**

# Lanka T10 Super League - 2024

## இன்றைய போட்டிகள்




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7